யாழ்ப்பாண முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம்.

# — நினைவலைகள் —

மர்ஹூம் மீ. மு. மக்பூல் (S. L. A. S. — Class I)

அவர்களின்

## 100வது நாள் நினைவு மலர்

## IN MEMORIUM

*Marhoom* M. M. MAKBOOL (S. L. A. S. — Class I)

THE JAFFNA MUSLIM DEVELOPMENT ASSOCIATION

JAFFNA.

# தொடரும் நினைவலைகள்.....................

இலங்கைத் திருநாட்டின் நிர்வாக சேவையில் அதியுயர்ந்த பதவிகளுள் ஒன்ருன அரசாங்க அதிபர் பதவியை, மிக இளம் வயதிலேயே, தம் கல்விச் சிறப்பின் மூலம் பெற்று, அப்பதவியை அலங்கரித்துச் சிறப்பித்து, இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கும், சிறப்பாக யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கும் பெருமை தேடித்தந்த பெருந்தகை மர்ஹூம் மீரான் முகிதீன் மக்பூல் அவர்களின் நினைவாக இம்மலரைச் சமர்ப்பிக்கின்ருேம்.

எமது சங்கத்தின் ஸ்தாபகராகவும், தலைவராகவும், செயற்றிறன் மிக்க செயலாளராகவும் பணியாற்றிய அம்மாமனிதன எம் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் பல. அவற்றிற் கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று, காலத்தால் அழியாத சின்னமாகப் பொம்மைவெளி குடியேற்றத்திட்டமும், அங்கமைந்துள்ள சுய உதவி வீடமைப்புத் திட்டமும் சான்று பகர்கின்றன. மானுடத்தை மதித்த இம்மாமேதைக்கு இந் நினைவு மலரைச் சமர்ப்பிப்பதில் மனவமைதி பெறுகின்ருேம்.

எமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று நாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்து பல்வேறுதரத்தினரான பிரமுகர்கள் இம் மலருக்கு மணமூட்டும் பல இதழ்களைச் சேர்த்துள்ளார்கள். அவர்கள் அனைவர்க்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இம் மலரைச் சிறந்த முறையில் அச்சுப்பதித்துதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈடு செய்ய முடியாத பேரிழப்பால் தவிக்கும் அன்னவரின் குடும்பத்தினர்க்கும், சுற்றத்தினர்க்கும் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாம் வல்ல இறைவன் "ஜன்னதுல் பிர்தௌஸ்" என்னும் சுவனபதியில் அவரைச் சேர்ப்பானுக.

M. அன்வர்,
செயலாளர்,
யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம்.


118, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

DONATED TO
JAFFNA UNIVERSITY LIBRARY
BY
Prof. Karthigesu Sivathamby
in Memory of his Father
PANDIT SAIVAPULAVAR
T. P. KARTHIGESU
2000

## *Marhoom* MEERAN MOHIDEEN MAKBOOL

B. A., (Hons.) (Ceylon). Postgraduate Diploma in Intergrated Survey (The Netherlands)

S. L. A S ...... Class 1



**Birth**

**·20-04-1942**

**Untimely Death**

**22-01-1988**

GOVT. AGENT AND DISTRICT SECRETARY.
MANNAR DISTRICT. (28-10-'85 – 22-01-'88)

# மக்பூல் நாமம் என்றும் வாழும்

அறிவில் ஆழமானவர்; ஆளுமையால் உயர்ந்தவர்; இன்முகம் கொண்டவர்; ஈதலிலே சிறந்தவர், உபகாரத்தில் உயர்ந்தவர்; ஊரவர்க்கு உதவியவர்; எழுத்தாட்சி மிக்கவர்; ஏணியாக நின்றவர்; ஐயோ; என்றே தமிழினம் ஏங்க, எம்மை விட்டும் ஏகியவர்; ஒற்றுமைக்காக உழைத்தவர்; ஓங்கு புகழ் பூத்தவர். ஆம்; அவரேதான் எம் உள்ளம் கவர் மர்ஹூம் மக்பூல் அவர்கள்.

## அறிவில் ஆழமானவர்

பாலர் பருவத்திலேயே பிரகாசமான அறிவைக் கொண்டிருந்தவர் நண்பன் மக்பூல். யாழ். மஸ்ரஉத்தீன் பாடசாலையில் அவர் ஆரம்பக் கல்வியைப் பெற்றபோது அவருக்குக் கிடைத்த இரட்டை வகுப் பேற்றம் இதற்குச் சான்றாகும். சிறு வயது முதலே துடுக்குத் தனமும்; ஹாஸ்ய உணர்ச்சியும்; எதற்கும் நன்கு சிந்தித்து முன்சென்று உதவும் பண்பும் நிறைநது மிளிர்ந்தவர் மக்பூல். யாழ். மஸ்ரஉத்தீனில் இருந்து இடைநிலைக் கல்விக்காக யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமது படிப்பைத் தொடர்ந்த அவர் அங்கும் படிப்பில், விளையாட்டில் அனைத்துத் துறையிலுமே முன்னணியிற் திகழ்ந்தார். வடமாகாண ஆசிரிய சங்கத்தினரால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் முதற்பிரிவில் சித்தியடைந்தார். சி. தா. ப. (S. S. C) பரீட்சையில் முதற் பிரிவிற் சித்தியடைந்தமை, வைத்தீஸ்வராவில் இருந்து முதல் மாணவனாகப் பல்கலைக்கழகம் சென்றமை என்பன மேலும் இவரது புகழுக்குக் காரணமாயின. பல்கலைக்கழகத்திற்கு இவர் தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி அன்று வைத்தீஸ்வரா ஒரு நாள் விடுமுறை அளித்துக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகம் புகுந்த இவர், அங்கும் தமது திறமையைக் காட்டத்தவறினார் அல்லர் தாய் மொழியைப் போதனாமொழியாகக் கொண்டு பல்கலைக்கழகப் படிப்புத் தொடங்கிய முதலாவது குழு, இவரது குழுவேயாகும். கலைமாணி இறுதித் தேர்வில் பொதுத் துறையில் உயர் சிறப்புப் பிரிவில் சித்தியடைந்து சாதனை படைத்தவர் இவர். அக்கால தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய தற்போதைய உபவேந்தர் சு. வித்தியானந்தன், அமரர் கலாநிதி கைலாசபதி ஆகியோரின் பேரன்பைப் பெற்ற மாணவனாகத் திகழ்ந்தார். இன்பத் தமிழ் மீது அளவிலாத மோகம் கொண்ட இவர், தமிழ்ப் பாடத்திற் பல பரிசில்களையும் அங்கு பெற்றார். கலைமாணி இறுதித் தேர்வில் தமிழில் விசேட சித்தியையும் பெற்றார். இதே போன்று தாம் சார்ந்த சமயத்துறையிலும் சிறந்து விளங்கினார். அகில இலங்கை முஸ்லிம் சகாய நிதிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மீரானியாக் கல்லூரி இராப்பாடசாலை மூலம் தோற்றி முதற் பரிசைத் தட்டிச் சென்றார். அதே போன்று தாம் கல்வி கற்ற வைத்தீஸ்வரா வளர்த்த சைவ சமயத்திலும் சிறந்த அறிவைப் பெற அவர் தவறவில்லை. இதற்குச் சான்றாகக் காலத்துக்குக் காலம் அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளில் அவர் புகுத்திய நாயன்மார் மேற்கோள்கள் அமைகின்றன.

## ஆளுமையால் உயர்ந்தவர்

ஆளுமை என்னும் சொல் உடல், உளப் பூரணத்துவத்தைக் குறிப்பது எனக் கொள்ளலாம். அவரது நெடிது உயர்ந்த தோற்றம்; பரந்த உடல்; ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய அகன்ற நெற்றி; கருணை ததும்பும் இனிய முகம் ஆகியன அனைவரையும் எப்போதும் அவர்பால் கவர்ந்தன. உடலில் அமைந்த அவரது ஆளுமை உள்ளத்திலும் அவ்வாறே அமைந்திருந்தது. எப்போதும் அவரது சிந்தனை முழுமையாகவே காணப்பட்டது. அவர் சிறுவராக இருக்கும்போதே, அக்கால முஸ்லிம் வட்டாரத்தில் இயங்கிய யாழ். முஸ்லிம் மாணவர் சங்கத்தின் செயலாளராகவும், அதன் பின்னர் யாழ். முஸ்லிம் விளையாட்டுச் சங்கத்தின் தலைவராகவும் பல வருடங்கள் பதவி வகித்து மாணவர் சமுதாயத்தைத் திறம்பட வழி நடத்திச் சென்று சமுதாய சேவைக்கே தன்னை அர்ப்பணித்த சிறந்ததொரு சமூக சேவகர் அவர். ''பரிபூரண சிந்தனையுடையவனே பரிபூரண மனிதன்'' என்பதற்கிணங்க எதனையும் பூரண வடிவிற் சிந்தித்து, தாம் எடுத்த எக்காரியத்தையும் சிந்தாது, சிதையாது பூரணமாக முடிக்கும் ஆளுமை மிக்க அதிபர் அவர்.

## இதயத்தால் இனியவர்

ஏழ்மையான குடும்பத்திலே பிறந்தவர் மக்பூல். வறுமையின் பிடியிலே சிக்கித் தவித்தவர் அவர். அதனை நன்கு உணர்ந்திருந்த அவர் என்றும், எல்லோர்க்கும் இதயத்தால் இனியவராகவே விளங்கினார். தாம் வாழ்ந்த காலம் முழுவதும் மக்களின் தொண்டனாகவே அவர் தம்மை ஆக்கிக் கொண்டார். படித்துப் பட்டம் பெற்று உயர் பதவிகள் பல வகித்த போதும் தமது சிறுவயதில் எவ்வாறு மக்களுடன் பழகினாரோ அவ்வாறே வாழ்க்கையின் முழுக்காலமும் எல்லோருடனும் இதய சுத்தியுடனும் இன்முகத்துடனும் நடந்து கொண்ட பெரியார் அவர். ''படைப்பினங்கள் பால் நீங்கள் இரக்கம் காட்டுங்கள்; படைத்தவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்'' என்னும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பொன்மொழியை முழுமையாக ஏற்று நடந்தவர் அவர்.

## ஊரவர்க்கு உதவியவர்

''பெற்ற தாயும்; பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே'' எனும் வாக்கை வேத வாக்காகக் கொண்டு ஒழுகியவர் இவர். யாழ். முஸ்லிம் மக்கள் இடநெருக்கடியால் அவதிப்பட்டபோது தற்போது அமைக்கப்பட்டுள்ள ''புதிய சோனகதெருக் குடியேற்றத் திட்டம்'' அமைவதற்கான முன்னேடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர். பின்னர், சில அசம்பாவிதங்கள் காரணமாக 1978ஆம் ஆண்டு வீடுகள் பல தீப்பற்றி எரிந்தபோது முழு மூச்சாக முயன்று சமாதானத்தை ஏற்படுத்திய பெருமை இவருக்குரியதே. உடனடியாக, ''யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம்'' என்னும் சங்கத்தை நிறுவி அதன் தலைமை பதவியையும் ஏற்று இலங்கை பூராவும் சென்று பொருள் சேர்த்து எரிந்த வீடுகளுக்குப் பதிலாகப் புது வீடுகளைக் கட்டிக்கொடுத்து ஏழைகளின் கண்ணீர் துடைத்தவர் அவர். அம்மக்களது தொழில் முன்னேற்றத்தைக் கருதி சுயதேவை வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் மத்தியில் பீடிக் கைத்தொழிலை ஆரம்பித்து வைத்துத் தொழிலுக்கும் அவரே வழிகாட்டினுர். என்ன ஆச்சரியம்! ஆரம்பித்து வைத்த அவரே அறியாத வகையில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கத்தில் மீதமாக இருந்த பணம் முழுமையும் சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்டு, வீடிழந்து அகதிகளாக ஒஸ்மானியாக் கல்லூரியில் தங்கியிருந்த புதிய சோனகதெரு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர் இறந்ததன் பின்னர் அவரால் விட்டுச் செல்லப்பட்ட பணம் ஏழைகட்கு உதவியதன் மூலம் ''செத்தும் கொடை கொடுத்த சீதக்காதியின்'' வழித்தோன்றலாகவும் அவரைக் கொள்ளலாம்.

சமீபத்திய சம்பவங்களால் வீடுவாசல்களை விட்டும் அகதிகளாக அல்லற்பட்டு வெளிக்கிளம்பிய மக்களையெல்லாம் சொல்லொணு இரக்க சிந்தனையுடன் தாம் அதிபராகக் கடமையாற்றிய மன்னுர் மாவட்டத்திற்கு வாருங்கள், வாருங்கள் என அழைத்து, அன்புடன் உபசரித்து; இராப்பகலாக ஊண் இன்றி, உறக்கமின்றி உழைத்து ஆதரித்த ஆதரவாளர் அவர். அவரது மரணச் சடங்கின்போது திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம் அவர்மீது மக்கள் கொண்டிருந்த வற்றுத அன்பைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது எனலாம்.

> ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் — அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு''

என்னும் வள்ளுவப்பெருமானின் திருவாக்குக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் இவர்.

## எழுத்தாட்சி மிக்கவர்

காலத்துக்குக் காலம் பல்வேறு பாடசாலை மலர்களிலும்; பெரியார்களின் நினைவு மலர்களிலும் இவர் எழுதிய கட்டுரைகள் இவரது எழுத்தாற்றலைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. சமுதாயப் பற்றுள்ள இவர் சமீபத்தில் எழுதிக்கொண்டிருந்த ''யாழ்ப்பாண முஸ்லிம்களின் கல்விநிலை அன்றும்; இன்றும்'', என்னும் நூல் முற்றுப் பெருத நிலையிலேயே அவரை நாம் இழக்க நேரிட்டமை எமது துர்ப்பாக்கியமேயாகும்.

## ஓங்கு புகழ் பூத்தவர்

இவர் பெற்றிருந்த ஆழமான அறிவு; உயர்ந்த ஆளுமை; தம் துயர் மறைத்து மாற்றுர் துயர் துடைக்கும் பண்பு; என்றும் எங்கும் புன்முறுவலுடன் கூடிய இன்சொல் ஊரார்க்கு உதவும் தனித்தன்மை; பெரியார்களை மதித்தல், சிறியார்மீது இரக்கம் காட்டுதல், சகிப்புத் தன்மை, இன, மத பேதமற்ற சேவை மனப்பான்மை; தன் தாய் நாட்டின்மீதும், தாய் மொழியின்மீதும் கொண்ட தீராத காதல் போன்ற போற்றற்குரிய பண்புகள் காரணமாக ஓங்கு புகழுடனே இவர் வாழ்ந்துகொண்டிருந்தார். பாலர் பருவம் முதல் பல்கலைக் கழகப் படிப்புவரை, அதன் பின்னர் அவரது பலதரப்பட்ட உத்தியோக வரிசை நிலைகளிலும் கூட புகழ் அவரை நாடி வந்துகொண்டே இருந்தது. கற்றுரும் புகழ்ந்தனர், கல்லாதாரும் புகழ்ந்தனர். உற்றுர் புகழ்ந்தனர்; ஊரவர் புகழ்ந்தனர், உதவி பெற்றேர், பெருதோர் அனைவருமே புகழ்ந்தனர். புகழின் உச்சியிலே நின்ற அவரை இவ்விளம் வயதிலேயே தன்னை வந்தடைந்து கொள்ள இறைவன் நாடிவிட்டான்போலும். ''வலிது வலிது விதி என்பது வலிது''. விதியை வெல்லும் சக்தி யாருக்கும இல்லை. அவ்விதியின் வலி நின்று 26-04-1942-ல் யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் பிறந்த எம் நண்பன் மக்பூல் அவர்கள் 22-01-1988-ல் மன்னுர் மண்ணில் தமது இன்னுயிரை நீத்தார்கள். எனினும் அவர் தமது சிறுவயது முதலே ஓடிஆடி விளையாடிய யாழ். ஜின்னு மைதானத்திற்கு அருகிலேயே அடக்கம் செய்யப்படக் கிடைத்தமையும் அவர் தாம் பிறந்த மண்ணின்பால் கொண்ட பாசத்தின் பிரதிபலிப்பே எனக் கொள்ளலாம். எல்லாம் வல்ல அல்லாஹ் அவரை ''ஜன்னதுல் பிர்தெளஸ்'' என்னும் உயர்ந்த சுவர்க்கத்தில் வாழ வைப்பாளுக. அவர் உடல் மறைந்துவிடினும் அவர் தம் சேவைகள்; பண்புகள் காரணமாக ''மக்பூல் நாமம் என்றும் வாழும்''.

அல்ஹாஜ் M. S. M ஷிஹாபுத்தீன்,
அதிபர்,
யா./ மஸ்ரஉத்தீன் முஸ்லிம் கலவன் பாடசாலை.

1988-04-24.

## "சமூகத் தொண்டனே தலைமைக்குரியவன்" (நபி (ஸல்))

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராயிருந்து திடீர் மரணமெய்திய மர்ஹூம் எம். எம். மக்பூல் அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்படும் நாளும் நாள் நினைவு மலருக்கு இச்செய்தியை வழங்க நான் அவரின் சக ஊழியன் என்ற முறையில் கடமைப்பட்டுள்ளேன்.

எமது சங்கத்திற்கு 1983-01-01 முதல் அவர் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டது எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். அவரின் தலைமைக் காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலனுக்கும் அவர் ஆற்றிய பணி என்றும் நினைவு கூறத்தக்கதாகும்.

எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் எமக்கென நிரந்தரமான ஓர் அலுவலகமோ, களஞ்சிய அறையோ இல்லாத பெரும் குறையை உணர்ந்த அவர், அவைகளை உள்ளடக்கிய ஒரு கட்டடம் அமைக்க ஆலோசனை கூறி அதற்காக ரூபா 1000,000/- (பத்து இலட்சம் ரூபா) உம் சங்க நிதியிலிருந்து ஒதிக்கித் தந்தார். இருந்தும் கட்டிடம் அமைவதற்குத் தகுதியான இடம் இல்லாமல் நாம் திண்டாடுவதைக் கண்ட அவர் தனது சொந்த முயற்சியையும், பதவிப் பலத்தையும் பிரயோகித்து இலங்கை அரசாங்க புகையிரத பகுதிக்குச் சொந்தமான காணியைப் பெற்றுத் தருவதில் எவ்வளவு சிரமங்கள் மேற்கொண்டார் என்பதைச் சங்க அங்கத்தவர்கள், ஊழியர்கள் ஒவ்வொருவரும் நன்றியுணர்வோடு இன்றும் நினைவு கூருவர்.

அத்தோடு, எமது கிராம வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் அவர் செய்த சேவைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

(1) தலைமன்னார் பியர் வெளிச்சவீட்டு வீதியைத் திருத்தியமைக்க சிபாரிசு செய்ததோடல்லாமல் உடனடியாக அதைச் செயல்படுத்தியும் காட்டினார்.

(2) எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சியிலும், தனது பங்களிப்பைச் செய்ய அவர் தவறவில்லை. 1986 பிற்பகுதியில் ரூபா 100,000/- (ஒரு இலட்சம் ரூபா) ஐ பாடசாலைக் கட்டிட விஸ்தரிப்பிற்காக வேண்டி சிபாரிசு செய்து அதை நிறைவேற்றியும் தந்தார்.

இச்சேவைகளின் தலைமகனை நாம் இழந்து நிற்கும் இவ்வேளையில் அன்னாரின் சேவைமூலம் இறைவன் அவனின் உயர்வான கவனத்தை வழங்க வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

M. S. M. மீராசாஹிபு மரைக்காயர்,
தலைவர்,
தலைமன்னார் துறைமுகப் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம்.

1988-04-19,

* * *

# **Marhoom M. M. Makbool**, S. L. A. S. Class I,

Government Agent and District Secretary,
Mannar District

"Inna Lillahi Wainna Ilaihi Rajioon"
(To Allah we belong and to him is our return)

It was with much sorrow and shock that we in the Public Service and the Muslim community in particular heard the news of the tragic and the untimely death of Mr. M. M. Makbool on Friday, the day Jumma, the 22nd January 1988. By his demise the S. L. A. S. has lost one of its most talented young administrators who would have aspired to the highest echelons in Public Service and the Muslim community in particular lost its first Government Agent who was one of their very few senior civil servants whose advice was sought by them at different times to solve some of their burning problems. They really lost one of their budding advisors / leaders.

Mr. Makbool was born and bred in Jaffna, was also educated in Jaffna until he entered University of Ceylon, Peradeniya in 1960. My Association and friendship commenced in 1961, the year in which I entered the University. He came in search of me on the first day itself, though ragged me, he became one of my good friends and advisors in the Campus, thereafter. During the period he proved an ideal student and earned the admiration of his fellow students and the respect of the members of staff.

Though advised to specialise in Economics or in Tamil Language by the Professors incharge, on the results of the General Arts Qualifying Examination, he chose to follow a general degree in which he obtained a 2nd Class upper division pass in 1963 which is a rare honour for him to have achieved. Being a brilliant student I think he topped the General Batch in that year.

After a brief spell of employment in different places in Public Service he joined the Sri Lanka Administrative Service on 1-10-1967 through the Open Competitive Examination and ranked very high in the order of merit He was the 2nd person to be admitted to the Administrative Service, from Jaffna; the first being late Mr. A.M.A. Azeez.

He served as Divisional Revenue Officer in Sammanthurai from 1967-1970, as District Land Officer Kilinochi from 1971-1979, as Additional Government Agent (Lands) Mannar from 1981-1984, and Ampari from 1984-1985. He was awarded a scholarship in 1979/80 to the Netherlands to follow a long term Research Course in Multi-Disciplinary Survey for Development Planning which he completed very successfully. Thereafter, he was also requested to obtain further leave to do his Masters degree which unfortunately due to the excigencies of service the Government of Sri Lanka had to turn down.

By knowing the nature of the person and aptitude towards the work he was also selected by the Government in 1985 to work as a Special Additional Government Agent in Ampari District to cover the Administrative and Land Work in electorates of Kalmuai, Samanthurai and Pottuvil. He was solely incharge of the new Additional Government Agent's Office to be set up to cover the work of the above electorates. He was subsequently, appointed Government Agent and District Secretary Mannar in October 1985 and worked there till that unfortunate date.

I need not give any testimony towards his work and interest to solve the problems of the poor without looking into caste, creed and religion but those who knew him in Amparai and Mannar will bear witness to them.

He was an extremely conscientious worker and spent almost the entire part of his early public life in the remote areas such as Vavunia, Amparai and Mannar A devout Muslim from a Middle Class family, working under trying conditions, never taking a step back or requesting for a change of work as the condition in Mannar did not improve during the last five years due to the terrorist activities, followed the Government instructions to the word by organising the arrangements for settlements of those refugees who were returning from India at the time of his death which may have been the ultimate cause.

But for an officer who was always availabe for the peaceful settlement of the administrative problems who suggested acceptable solution to most of the problems in that area had to die in that manner was tragic

It reminds me of a saying of the Prophet that on the day of Judgement those who have been killed in Allah's way, and unjustly will get special treatment and that the rules apply to ordinary people will not apply to them. Mr Makbool undoubtedly falls into this category and may he attain Jennathul Firdouse — Ameen.

Undoubtedly, he will be remembered by those with gratitude for the enormous contributions he has made for the development, the prosperity and furtherence of their country and specially for the advancement of the poor villagers in North and East

**M. Nabavi Junaid**
Additional Secretary & Director of Establishments
Ministry of Public Administration.

Colombo.
20-4-1988

# "சாதாரண மனிதன்"

மனித வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள் சகஜம், எந்தவொரு இறக்கத்தையும் சந்திக்காமல், இறுதி வரை ஏறிக்கொண்டேயிருந்தவர்களும், ஏற்றத்தின் ஓர் உச்சியை அடைந்தவர்களும் இல்லாமலில்லை. அவர்கள் தமது முந்திய நிலையையும், தம்மோடு பழகியவர்களையும் மறந்து புதுக் கோலமும் குணமும் கொண்டவர்களாகக் காணப்படுவர். உச்சியில் இருக்கின்ற அவர்களின் பார்வை தரையில் விழாது. அவர்களின் போக்கும், நோக்கும் தாம் இடம் பெற்றுள்ள மேல்மட்டச் சமூகத்தின் பக்கமே இருக்கும். அவர்களுடன்தான் பழகுவர்; அந்தச் சமூகத்தில்தான் உலாவுவர். இவர்களிலிருந்து தனித்துக் காணப் பட்டவர் மக்பூல்.

சாதாரண குடும்பத்திற் பிறந்த அவர், ஏறத் தொடங்கியபோது அடிமட்டத்திலிருந்தே ஆரம்பித் தார். திறமை, சுயமுயற்சி, தன்னம்பிக்கை. தீர்மானமான நோக்கு ஆகியவற்றைப் படிக்கற்களாகக் கொண்டு ஏறத் தொடங்கியவர். இறுதியில் தன்னளவில் ஒரு சிகரத்தை அடைந்தார்.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை சிவில் சேவையினூடாகச் சிகரத்தை அடைந்தவர்களை ஒரு கைவிரலுக்குள் அடக்கலாம். சிவில் சேவையினூடாக அரசாங்க அதிபராகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்து முஸ்லிம், மக்பூல். அதுவும் நாற்பத்தைந்து வயதுக்குள்.

ஆயினும் அவர் இதனைப் பெருமையாகக் கருதவில்லை. இறுமாப்புக் கொள்ளவில்லை. சாதாரண மனிதரிலிருந்து தன்னைப் பிரித்துப் பார்த்ததில்லை. வீட்டிலும் சரி; பாடசாலையிலும் சரி, பல்கலைக் கழகத் திலும் சரி, தான் அனுபவித்த ஏழ்மையை — ஆரம்பகால நிலையை மறக்கவில்லை. அது நெஞ்சிற் பதிந்த தோடு அவரது நடத்தையிலும் அது பிரதிபலித்தது. பல்கலைக் கழகப் படிப்பு முடித்து முதலில் ஆசிரிய ராக — வங்கிஉயர் அதிகாரியாக — மேலதிக அரசாங்க அதிபராக — அரசாங்க அதிபராக இருந்ததுவரை தன் சுபாவத்தை மாற்றிக்கொள்ளவில்லை. எந்த நிலையிலும் ஒரே மக்பூல் தான். அவரை எளிதில் அணுகும் சாதாரண மனிதனாகவே இறுதிவரை இருந்தார். மக்பூலிடம் காணப்பட்ட சிறப்பம்சம் இது.

பொதுவாக உத்தியோக ரீதியான பெரிய பதவியில் இருப்போரிடம் காணப்படும் அதிகாரவர்க்க மனோபாவம், மிடுக்கு, ஒருவித பகட்டு, தற்பெருமை, செருக்கு — தலைக்கனம் இத்தியாதி 'லட்சணங்கள்' மக்பூலிடம் அண்டவில்லை. இவை அவரை விரோதித்துக் கொண்டன என்றும் கூறலாம்.

மக்களிடையே அவர் சாதாரண மனிதராகவே நடந்துகொண்டார். அவரைத் தெரியாதவர்கள் அவரை எங்கேயாவது காணநேர்ந்தால், பெரிய பதவியில் உள்ளவர் என்று கருதமாட்டார்கள். அந்தப் பதவிக்குரிய அடையாளம் எதுவுமே அவரிடம் ஒட்டியிருந்ததில்லை. எளிமைதான் படிந்திருந்தது. அவரது நெடிய உருவத்தைப் போன்று உயர்ந்த எளிமை அது. இந்த எளிமை மக்பூலிடம் காணப்பட்ட தனித் துவமான அம்சம்.

அவருடைய பதவியிலிருப்போர் தமது அந்தஸ்துக்காக சொந்தத்தில் ஒரு கார் வைத்திருப்பர். மக்பூ லிடம் அது இருக்கவில்லை. சொந்தமாக ஒரு சைக்கிள்கூட இருந்ததில்லை. இரவல் அல்லது வாடகைச் சைக்கிளில் அல்லது கால் நடையில் திரிவார். தெரிந்தவர்கள் யாராவது எதிர்ப்படும்போது நின்று சுக நலன்களை விசாரிக்காமற் போகமாட்டார். அவசரமாயிருந்தால், குறைந்தபட்சம் ஒரு தலையசைப்பாவது இருக்கும்.

மக்பூல் மனிதாபிமானம் உள்ளவர். பாதிக்கப்பட்டவர். கஷ்டப்பட்டவர்களிடம் அவருக்கு மிகுந்த அநுதாபம் இருந்தது. பலருக்குத் தனிப்பட்ட உதவிகளும் செய்திருக்கிறார். அதேவேளை பொதுச் சேவை யிலும் ஈடுபட்டார். பொம்மைவெளிச் சாதனை மட்டுமல்ல 1978-ல் அங்கு பலரின் குடிசைகளும், வீடு களும் நெருப்புக்கிரையானபொழுது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒஸ்மானியாக் கல்லூரியில் தஞ்ச மடைந்தனர், அப்போது மக்பூல் செய்த உதவிகள், பின்னர் எரிந்த வீடுகளுக்குப் பதிலாக அரசாங்க உதவியுடன் புதிய வீடுகள் கட்டிக் கொடுத்தது போன்ற இன்னும் பலதையும் செய்திருக்கிறார். இப் பொதுச் சேவைகளைத் தன் புகழுக்காகச் செய்யவில்லை. அவர் புகழை விரும்பியதுமில்லை. அவருக்கு இருந்த மனிதாபிமானத்தினாலும், சமூக உணர்வினாலும் ஆற்றிய சேவையாகும்.

அவர் வாழ்க்கையை ஒரு சுமையாக என்றுமே எண்ணியதில்லே. அதை ஓர் இயற்கையான நிகழ்வு என்றே கருதினர். உத்தியோகக் கடமைகளிலும், பெற்றேர், சகோதரங்கள், மனைவி, மக்கள் சம்பந்தப் பட்ட குடும்பக் கடமைகளிலும், பொதுக் காரியங்களிலும் அழுத்தமான பொறுப்புணர்வு உடையவர். அதேவேளை எந்தப் பிரச்சனைகள் — சிக்கல்கள் தோன்றினலும் அதற்காக மனதைப் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் — தளம்பாமல் அவற்றைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபடுவார். அவற்றைச் சமாளிக்கும் திற னும் மனேதிடமும் அவருக்கு இருந்தன. அவருடைய சிந்தனையிற் குழப்பம் இருந்ததில்லை; தெளிவு இருந்தது. அதனல் பொறுப்பான வேலைகளைச் சீராகச் செய்யமுடிந்தது.

மக்பூல் உரையாடற் கலையில் வல்லவர். அவரது உரையாடல் சுவாரஷ்யமானது. அதனல் அவர் நண்பர்களுடன் இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாயிருக்கும். மனிதரைக் கூர்ந்து அவதானிக்கும் இயல்புடைய அவர் ரசனை உள்ளமுடையவர். சிலருடைய பேச்சையும் அங்க அசைவுகளையும் ரசித்து அச்சொட்டாக மனதிற் பதித்துக்கொள்ளும் வழக்கமும் இருந்தது. முஸ்பாத்தியான கதைகளில் இழை யோடும் நகைச்சுவை. தான் ரசித்தவர்களைப் பற்றிக் கூறுகையில் — அவர்களது குரலில் நடிப்போடு சொல லும்போது நகைச்சுவை உச்சத்தை எட்டும். மற்றவர்களைச் சிரிக்கச் செய்வதோடு தானும் வாய்விட்டுக் கலகலவெனச் சிரிப்பார். ஏதாகிலும் ஒரு பிரச்சனையில் அழுமூஞ்சித்தனத்தில் அங்கு வருபவர்கள்கூட சிரிக்காமல் இருக்கமாட்டார். காரியார்த்தமான கதைகளில் இந்த நகைச்சுவை, சிரிப்பு இருக்காது. அக்கறை இருக்கும்.

மக்பூல் ஓர் ஆர்வமுள்ள வாசகர், இலக்கியப் பிரியர். ஆங்கில — தமிழ் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், சஞ்சிகைகள் மற்றும் பலவகையான நூல்கள், பத்திரிகைகளைத் தொடர்ந்தும் படித்துக் கொண்டிருந்தார். இதனல் அநேக விஷயங்களிற் பரந்த அறிவைப் பெற்றிருந்தார்.

மக்பூல் தன் உத்தியோக வாழ்க்கையில் கைச்சுத்தமாக இருந்ததால் சேமிப்பு, சொத்து என்றெல் லாம் இல்லை. இவர் தனது குடும்பத்தைவிட்டு நிரந்தரமாகப் பிரியும்போது அவரது சம்பளம், அரசாங் கத்தின் ஈட்டுத் தொகையைத் தவிர வேறு எதையும் விட்டுச் சென்றதாகத் தெரியவில்லை.

மக்பூல் திறந்த மனம் உடையவர்: தான் சொல்ல விரும்பாத ஒரு சில விஷயங்களைத் தவிர மற் றும்படி மனம் திறந்து சொல்லுவார், பேசுவார். எவருக்கும் தீமை தரக்கூடிய எதையும் பேசியதை — சொன்னதை நாம் கேட்டதில்லை. மனதிலும் அதை எண்ணியிருக்கமாட்டார் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். அந்தத் தேவை அவருக்கு ஒருபோதும் இருந்ததில்லை.

நீர்கொழும்பு.
7-04-1988.

சுபைர் S. கலீல்.

★
★ ★

" நம்மில் முதியவர்களைக் கண்ணியப்படுத்தாதவரும், நம்மில் சிறுர்களுக்கு
இரக்கம் காட்டாதவரும், நன்மையைச் சொல்லி, தீமையை அகற்றுதவரும்
நம்மைச் சார்ந்தவரல்லர் "

அமுதவாக்கு — நபி (ஸல்)

# மறக்கப்பட முடியாத மக்பூல்

மக்பூல் எனது நேரடி மாணவரல்ல. அவர் கைலாசபதியின் மாணவர். கைலாசபதிக்கும் எனக்கு மிருந்த கருத்துநிலை ஒருமைப்பாடுகள் காரணமாகவும், கைலாசபதியின் மாணவனுக படிக்கின்ற காலத்தி லேயே மக்பூலை அறிந்திருந்ததன் காரணமாகவும் மக்பூலின் மனதில் அவரின் '' ஆசிரியர் குழாத்தில் '' நானும் ஒருவனுகவிருந்து வந்துள்ளேன். அது தான் எமது உறவின் தளம்.

பின்னர், மக்பூல் நிருவாக உத்தியோகத்தராக முகிழ்த்து, குறிப்பாக விவசாய முஸ்லீங்களின் பிரச்சனைகளை நன்கு தெரிந்திருந்த ஒருவராக விளங்கத்தொடங்கிய பொழுது அந்த உறவு நட்புறவாக ஸ்திரமடைந்தது.

மன்னரில் (முதலில் மேலதிக அரசாங்க அதிபராகவும், பின்னர் அரசாங்க அதிபராகவும் கடமை யாற்றிய பொழுது) நாமிருவரும் அடிக்கடி தொடர்புகொள்ளும் ஒரு நிலைமை ஏற்பட்டது. அகதிகள் புனர்வாழ்வு வேலைகள் அதில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. மக்பூலை நேரடியாகச் சந்திக்க முடியாத பொழுது திரு. செபநாயகம் மூலம் தொடர்பு கொள்ளும் வழக்கமும் இருந்தது.

நண்பர் மக்பூலுடன் தொடர்பு கொள்ளும் எவருக்கும் அவரது இரண்டு பண்புகள் பளிச்செனத் தெரியவரும்.

ஒன்று: அவருக்கு அடிநிலை மக்களின் வாழ்க்கை அவர்களது சுகதுக்கங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள் ஆகியன நன்கு தெரிந்திருந்தது. அந்நிலைமக்களது பிரச்சினைகளை அவர் உணர்வு பூர்வமாக விளங் கிக் கொண்டிருந்தார்.

இரண்டு: தான் எதிர்நோக்கும் எந்தப் பிரச்சினையையும் புலமை நிலைப்பட (Intellectual) ப் பார்க்கும் திறன் அவரிடத்து இருந்தது.

முதலாவது அவரது சொந்தவாழ்க்கையின் அனுபவத்தின் வழியாக வந்தது. இரண்டாவது அவ ரது கல்வித் திறனல் அவருக்கு கிட்டியது.

மக்பூலின் மிகச்சிறந்த மனிதாயதப் பண்பு அவர் என்றும் ஏழ்மையை வெட்கத்துக்குரிய ஒன்ருக கொள்ளாதிருந்தமையே. தனது வாழ்க்கையில் தான் ஏழ்மைக் கோட்டைக்கிழித்து மேலே வந்தது பற்றி ஒளிவுமறைவின்றிப் பேசுவார்.

நான் தலைமன்னர் வழியாக இந்தியா சென்று திரும்பும்பொழுது மக்பூலுக்கு வழங்கிய அன்பளிப் புக்கள் புத்தகங்களே. புதிய புத்தகங்கள் பற்றியும், புதிய கருத்துகள் பற்றியும் சலிப்பின்றி உரையாடு வார்.

மக்பூல் மறக்கப்படக்கூடியவரல்லர். மக்பூலைப் பற்றி நினைக்கும்பொழுது யாழ்ப்பாணத்தினைத் தாயக மாகக் கொண்ட இன்னெரு பிரபல நிருவாகஸ்தர் நினைவுக்கு வருவதுதவிர்க்கப்பட முடியாத ஒன்ருகும்.

அறிஞர் அஸீஸ் யாழ்ப்பாணத்துத் தமிழ்—முஸ்லீம், மரபுகளினதும், முஸ்லீம் — தமிழ் உறவுகளி னதும் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

மர்ஹூம் மக்பூல், அஸீஸ் அவர்கள் வாழ்ந்த அளவு காலம் வாழவில்லையெனினும், பல விடயங் களில் அஸீஸ் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே விளங்கினர். வைத்தீஸ்வரா வழங்கிய அத்திவாரம் ஒரு காரணமாகவிருக்கலாம். இருவருக்குமே முஸ்லீம் விவசாயிகள் பற்றிய நிறைந்த அக்கறை இருந்தது. இருவருமே யாழ்ப்பாணக் கலாசாரத்தின் நிறைவான சில அமிசங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர்கள்.

மக்பூலின் சாதனைகள் அவரை என்றும் எம் மனதில் நிறுத்தி வைத்திருக்கும்.

**கார்த்திகேசு சிவத்தம்பி.**
பேராசிரியர்—நுண்கலைப் பிரிவு
யாழ். பல்கலைக் கழகம்

நடராஜகோட்டம்,
வல்வெட்டித்துறை.
5-4-1988.

*An Appreciation*

Mr. M. M. Makbool joined the Sri Lanka Administrative Service in 1967. The major part of his career was in the Land Commissioner's Department. He served as Assistant Land Commissioner from August, 1970 and was subsequently appointed a Deputy Land Commissioner at the Head Office. In 1985, he was posted as Deputy Land Commissioner/Additional Government Agent (Lands) in the Mannar District. In this capacity, he made substantial contribution towards the upliftment of the rural masses in the District. He continued his good work as Government Agent of the Mannar District and performed his duties without fear or favour and in the highest traditions of the public service.

By his untimely death, which was a shock to all of us, Sri Lanka has lost one of its ablest administrators. We, his colleagues in the Administrative Service, mourn his death and share the grief of his wife and children. Though he is not with us any more, his fragrant memory will always abide with us.

**A. A. Wijetunga,**
Land Commissioner.

Land Commissoner's Department,
No 321, Galle Road,
Colombo 3.
27th April 1988.

* * *

The life of this world is but empty :
What is serious is the life hereafter
The teacher of God's truth is not baulked
By frivolous objections or insults
Or persecution. The wicked will be
Cut off to the last remnant God's wisdom
Pervades the whole of His Creation,
And in His hands are the keys of the Unseen
And the secrets of all that we see

*The Holy Quran (Vi. 31 — 60)*

# மாமனிதன் மக்பூல்

எனது இனிய நண்பரும், அயல்மாவட்டமான மன்னாரின் அரசாங்க அதிபராகவிருந்தவருமான எம். எம். மக்பூல் அவர்களின் அகாலமரணம் தமிழ்ப்பேசும் மக்கள் யாவருக்கும் ஒரு பேரிழப்பாகும். நாற்பத்தைந்து வயதேயுடைய இளைஞரான மக்பூல் இவ்வளவு சடுதியாக மறைந்துவிடுவார் என்று யார் தான் எண்ணியிருப்போம்? யாழ்நகரின் முஸ்லிம் வட்டாரத்தில் பிறந்து வளர்ந்த மக்பூல் தன் இளமைக் காலக் கல்வியை வைத்தீஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்டார். 1960ம் ஆண்டு பேராதனைப்பல்கலைக் கழகத்திற்குப் பட்டப்படிப்பு மேற்கொள்ளச் சென்றார். 1963ல் சிறப்புச்சித்தியுடன் அங்கிருந்து பட்டதாரி யாக வெளியேறிய இவரைப் பலபதவிகள் காத்திருந்தன. முதலில் ஆசிரியராகப் பணியாற்றிப்பின்னர் இலங்கைவங்கியில் பதவிநிலை உத்தியோகத்தராக சில காலம் பணியாற்றினார். 1967ல் இலங்கைநிர்வாக சேவைக்குப் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவானார். குறுகியகால எல்லைக்குள் பல உயர்பதவிகளைப் பெற் றுச் சேவையில் முன்னேறிய மக்பூல் 1985ம் ஆண்டு மன்னார் அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார்.

நுண்மதி, ஊக்கம், விடாமுயற்சி, எக்காரியத்தையும் திறமையுடன் ஆற்றும் சாதுரியம் ஆகியன இவரிடம் காணப்பட்ட திறமைகள். இத்திறமைகள் அவரை வாழ்க்கை ஏணியின் உச்சிக்கு இட்டுச் சென் றன. இத்திறமைகள் யாவற்றிற்கும் மேலாக மக்பூல் ஒரு மாபெரும் மனிதனாக, பண்பாளனாக, உள்ளத் தால் உயர்ந்து உலகோர் உள்ளத்துள் எல்லாம் வாழ்ந்தார்—இன்றும்வாழ்கிறார். எளிமையான காட்சி, கடும்சொல் இல்லாத பண்பான பேச்சு, புன்முறுவல் தவழும்முகம், பேதம் இன்றி எல்லோரையும் தன் பால் நட்புடன் அரவணைக்கும் இனியசுபாவம்........ இவைதான் மக்பூல் என்ற மாமனிதனின் இயல்புகள்.

இஸ்லாமிய பண்பாட்டில் ஊறிய மக்பூல், அதன் உலகுதழுவிய சகோதரத்துவம் என்னும் உயர் நெறியை தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். சம்மாந்துறை, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளின் ஏழை விவசாயிகள் அவரைக் கண்கண்ட தெய்வமாகவே போற்றினர். விவசாய விருத்தியும் விவசாயக் குடி யான் நலனும் அவரின் விருப்புக்குரிய அக்கறைகளாக விருந்தன. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் அவர் நாவில் தவழ்வதைக் கேட்பதோ ஓர் இன்பம். தமிழ்மொழியை அதன்நெழிவு சுழிவுகளுடன் கையாளும் நாவன்மை அவரிடம் இருந்தது. மக்பூல் ஒரு தமிழ்க்கடல். இந்துமதத்திலும் தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் ஆகிய சமய இலக்கியங்களிலும் அவர் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். சாதாரண குடும்பத்தில் பிறந்த மக்பூல் தன்முயற்சியால் முன்னேறி மனிதனொருவன் வாழ்வில் அடையக்கூடிய சிறப் புக்கள் யாவற்றையும் பெரும்பேறு பெற்றார், எனினும் தன்னலனையே கருதும் எண்ணம் அவரிடம் என் றும் இருந்ததில்லை. தன் உறவினர்களையும் சுற்றத்தினரையும் ஆதரித்தவர்; அவர்களின் சுகதுக்கங்களில் தானும் இரண்டறக் கலந்தவர். அவரின் அயலவனாக வண்ணார்பண்ணையில் பல ஆண்டுகள் வாழ்ந்த நான் இதை நன்கு அறிவேன்.

எல்லோரையும் அரவணைத்து ஆதரித்த ஆலமரம் இன்று சரிந்துவிட்டது! அவரது குடும்பத்தினரும் உற வினர்களும் தம் தலைவனை இழந்து வருந்துகின்றனர். தமிழ் பேசும் மக்கள் ஒரு தலைசிறந்த நிர்வாகியை, வழிகாட்டியை, அறிஞனை இழந்து தவிக்கின்றனர்.

அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைத் துதிக்கிறேன்.

**க. பொன்னம்பலம்**
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்,
முல்லைத்தீவு மாவட்டம்.

முல்லைத்தீவு.
28-04-88

* * *

# அனுதாபச் செய்தி

அமரர் ஜனுப் எம். எம் மக்பூல் அவர்கள் எனது நெருங்கிய நண்பர். அவர் தமது ஆரம்ப மற்றும் இடை நிலைக் கல்வியை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் உயர்நிலைக்கல்வியைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கற்று, பல்கலைக்கழகப் பட்டதாரியானார்.

சிறிது காலம் கண்டி மாவட்டத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய ஜனுப் மக்பூல் மாவட்டக் காணி உத்தியோகத்தராகக் கிளிநொச்சியில் பணியாற்றினார். அதன் பின்பு உதவிக்காணிகள் ஆணையாளராகப் பதவியேற்று கொழும்பில் பணிபுரிந்தார். இக்கால கட்டத்தில் நெதர்லாந்துக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்றார்.

வெளிநாடு சென்று திரும்பிய பின்னர் மன்னார் மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவியேற்றார். அங்கிருந்து அம்பாறை மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி மீண்டும் மன்னார் மாவட்டத்தின் அரசாங்க அதிபராகப் பதவியேற்றுப் பணிபுரிந்தார்.

ஜனுப் மக்பூல் ஒரு சிறந்த முஸ்லிமாகவே வாழ்ந்தார். சத்திய இஸ்லாத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து இஸ்லாம் மார்க்கத்தின் வழி நின்று செயற்பட்டார்.

மதத்தால் இஸ்லாமியராக இருந்த போதும் ஜனுப் மக்பூல் அவர்கள் ஒரு தமிழ் மகனாகவே செயற்பட்டார். அடக்கமானசுபாவம், அமைதியானபோக்கு, அறிவாற்றல், ஆன்மீக நெறி, ஆணித்தரமான கருத்து, இரக்கசுபாவம் ஈமானில் உறுதி, எளிமையான வாழ்க்கை, ஏற்றமானபண்பு, ஐங்காலத் தொழுகை ஆகிய உயிர்ப்பண்புகள் நிறைந்த சீரிய இஸ்லாமியராக ஜனுப் மக்பூல் விளங்கினார் என்றால் அது மிகையாகாது. தனது அரச கடமையைக் கண்ணியத்துதுடனும், நேர்மையுடனும், மேற்கொண்டு வாழ்ந்தது போல் தன் சொந்த வாழ்க்கையிலும் சிறந்த பண்பாளனாகவும் கண்ணியவானாகவும் திகழ்ந்தார். அதன் காரணமாக அன்னார் மக்களின் அபிமானத்துக்குரியவராயிருந்தார்.

இளம் வயதில் அவர் மறைந்தமை குறிப்பாக யாழ். வாழ் முஸ்லிம் மக்களுக்கும் பொதுவாக தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

என்னைப் பெறுத்தவரையில் நான் ஒரு பண்பு மிக்க நண்பனை இழந்துவிட்டேன், இது மிகவும் துரதிஷ்டமானது.

அவரது பிரிவால் துயருறும் அவரது மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வை. மு. பஞ்சலிங்கம்**
யாழ். மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

* * *

மனிதர்களில் யாசகம் புரிவதில்லை என்று எனக்கு யார் அறுதிமானம் தருகின்றாரோ அவருக்கு சொர்க்கம் உண்டென நான் அறுதிமானம் கொடுக்கிறேன்.

அமுதவாக்கு — நபி (ஸல்)

*An Appreciation*

The Premature and tragic demise of Mr. Makbool, Government Agent, Mannar District has removed yet another 'key actor' in the Disaster Relief Administration of the Country. The family has lost its bread-winner. Mr. Makbool had been a kind father, devoted husband and in short a tower of strength for his brother and sisters who had to incidentally face a series of misfortunes during the recent past.

Mr. Makbool, after a commendable record of achievement in the University, started his administrative career as Divisional Revenue Officer, Samanthurai in the Ampara District. Thereafter he held the posts of District Land Officer, Assistant Commissioner of Lands, Deputy Commissioner of Lands, Additional Government Agent and finally Government Agent, Mannar District. All these positions carry a large component of relationship with the public. So much so, any person who occupy these positions is bound to acquire a wealth of experience in dealing with the members of the public. Makbool was simple in his ways, straight forward in his approach and was accessible to all the sections of the people.

It is said that management is by and large a matter of "managing situations". If it is so, few will envy the position of a Govenmeut Agent. Worst of all, that of a Government Agent of an affected district. Each time he is confronted with situations which arise unforeseen and each one different from the other. However planned and prepared one may be, it will not measure up to meet the situation. The fact that Makbool had weathered the Storm for more than three years show that he had been tactful and alert in his stewardship. He was able to achieve this by his experience which he had gained in the various positions he held in his career.

Mr. Makbool was appointed Government Agent at a relatively young age. He had many more years ahead of him and had the potential of reaching the top of ladder. It is an irreparable loss both for the country and his family that he was killed prematurely.

**R. Yoganathan,**
Deputy Commissioner.

Ministry of Reconstruction and Rehabilitation
Colombo
20-4-1988

---

God punishes not mere shortcoming:
There are degrees in good and evil
Deeds. Gcd is Merciful, but
His plan is sure, and none
Can stand in its way. We must
Avoid all superstitions and all excess
And humbly ask for His guidance

*Holy Quran C. 81 (vi130-150)*

# மனிதருள் மாணிக்கம் மக்பூல்

எனது அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய நண்பன் மக்பூல் அகால மரணம் அடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு சொல்லொணு அதிர்ச்சியும் ஆற்றெணு துயரமும் அடைந்தேன். நல்லவர்கள் இளமையிலேயே இறைவன் அடி சேர்ந்து விடுகிறுர்கள் என்ற வாசகத்தை அவருடைய இறப்பு எடுத்து இயம்பியதோ என்னவோ? ''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்றும் பெருமை'' தான் இந்த உலகத்துக்கு உண்டு என்று வள்ளுவர் கூறியதும் எமது சிந்தனைக்கு வருகின்றது.

மக்பூல் யாழ்ப்பாணத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் அசாதாரண விவேகத்துடனும் அக்கறையுடனும் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியர்களின் பாராட்டுக்குரிய மாணவனுகத் திகழ்ந்து அக் கல்லூரியில் இருந்து விசேடமாகச் சித்தி எய்தி பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்தார். பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் வியக்கும் விதத்தில் இறுதிப் பட்டப் பரீட்சையில் மிக விசேட சித்தி எய்தினர். (Upper Second Class) பல்கலைக்கழகப் பட்டப் படிப்பின் பின் சில காலம் ஆசிரியராகக் கடமை புரிந்துவிட்டு அகில இலங்கைப் போட்டிப் பரீட்சையில் கலந்து இலங்கை நிர்வாக சேவையில் புகுந்து சம்மாந்துறையில் பிரிவுக் காரியாதிகாரியாகக் கடமை ஏற்று அங்கு மூன்று வருடங்கள் வரை தொழில் புரிந்தார். பின்னர் கிளிநொச்சிக்கு காணி அதிகாரியாக மாற்றம் பெற்று அங்கு எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவராக எட்டு வருடங்கள் கடமை ஆற்றினர். இவர் காணிப் பரிபாலனத்தில் பெற்ற நிபுணத்துவம், அனுபவம் ஆகியவற்றினுல் பிரதிக் காணி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று கொழும்புத் தலைமை பீடத்துக்கு மாற்றலாகிச் சென்றுர். பின்னர் அங்கிருந்து 1981-ல் மன்னுருக்கு மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். 1985 ஒக்டோபர் மாதத்தில் மன்னர் அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்று இறக்கும்வரை அப் பதவியில் திறம்படச் செயலாற்றினர்.

அவரோடு யாழ்ப்பாணத்திலும் மன்னுரிலும் அரச சேவையில் இயங்கியவன் என்ற வகையில் அவருடைய செயல் திறன், மதிநுட்பம், ஆளுமை, சேவை மனப்பான்மை என்பவற்றைப் பற்றி நான் நன்கறிவேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசுவதிலும் எழுதுவதிலும் மிக்க பாண்டித்தியம் பெற்றிருந்தார். இளம் தமிழ் எழுத்தாளர்களையும் புலவர்களையும் ஊக்குவிப்பதில் அவருக்குப் பெரிய திருப்தி. முஸ்லீமாக இருந்தாலும் சைவர்களைத் தலை குனிய வைக்கக்கூடிய வகையிலே தேவார திருவாசகங்களை சரளமாக மேற்கோள் எடுத்துக் காட்டுவார். எதைப் படித்தாலும் ஆழமாகப் படித்துக் கொள்ளும் பழக்கம் அவரிடத்திலே இருந்தது. கலைமகளின் கடாட்சம் அவருக்கு நிறைய இருந்தது. நெதர்லாந்துக்கு புலமைப் பரிசில் பெற்றுச் சென்று அங்கும் டிப்புளோமா பட்டம் பெற்று வெற்றி வாகை சூடி நாடு திரும்பினர். கற்றோருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்புத்தானே,

எவரும் துன்புறுவதை அவரால் சகிக்க முடியாது. எவரின் பிரச்சினையையும் தீர்த்து வைக்க முனைவாரே ஒழிய ''முடியாது'' என்ற வார்த்தை அவருடைய வாயில் வராது. ''வேட்டன வேட்டோற் கெல்லாம் ஆசற நல்கு''கின்ற நற்பண்பு அவரிடம் நிறைய இருந்தது. 1977-ம் ஆண்டு அகதிகளாக தருமபுரத்திற்கு வந்தோருக்கும் 1983-ல் இருந்து மன்னுரில் அகதிகளாக்கப்பட்டோருக்கும் அவர் செய்த சேவைகள் அளப்பரியன. எப்போதும் ஏழை பங்காளனுகவே ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுக'' வாழ்ந்த பெருமகன் அவர். எப்போதும் சிரித்த முகத்தோடு சேவையாற்றிய செம்மல் மக்பூல். அவர் இப்போது எம் மத்தியில் இல்லை. அவருடைய மனைவி, மக்களுக்கு, தாய், சகோதரர் சுற்றத்தாருக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பை என்றுமே ஈடுசெய்ய முடியாது. மனிதருள் ஒரு மாணிக்கத்தை நண்பர்கள் இழந்து விட்டார்கள்.

''நீ என்னனுய் என்னனுய் என்பதல்லால் ஏழையேன் என் சொல்லி ஏற்றுகேனே''

அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

யாழ்ப்பாணம்
10-04-88

அ. ஜெ. செந்தில்நாதன்
முன்னைநாள் மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபர்.

# அனுதாபச் செய்தி

முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபர் அமரர் எம். எம். மக்பூல் அவர்களின் 100-ம் நாள் மறைவு தினத்தையொட்டி நினைவு மலர் ஒன்று வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமான ஒரு விடயமாகும். யாழ்ப்பாணத்து முஸ்லிம் சமூகத்திடையே தோன்றி, முயற்சியின் பலனாக உயர்ச்சி பெற்று மன்னார் மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய அமரர் மக்பூல் அவர்கள் தோற்றத்திலும், நடவடிக்கையிலும் முழுமையாகவே யாழ்ப்பாண தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலித்த ஒருவராவர். அவருடைய தமிழ் அறிவும் ஆர்வமும், எல்லாத் தரப்பு மக்களோடும் எளிமையாகப் பழகுவதற்கு ஏற்றவாறு அமைந்ததோடு, அவரின் இனிய குணநிசயங்களும் மிகவும் போற்றத்தக்கவை. பிறமாவட்டம் ஒன்றிலேயே சேவையாற்றி தாம் தொடர்ந்து யாழ்ப்பாண முஸ்லிம் மக்களோடு வாழ்ந்து, அவர்களுக்கு தன்னாலான சமூக சேவையைச் செய்யவேண்டுமென்று செயல்பட்டவர் அமரர் மக்பூல் அவர்கள். அதற்காக முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புக்களை உருவாக்குவதற்கு முன்னின்றுழைத்தவர்.

யாழ்ப்பாண முஸ்லிம்களின் வளர்ச்சி வரலாற்றில் அமரர் மக்பூலின் பெயர் நிச்சயமாக இடம் பெறும். அண்மைக் கால வரலாற்றில் இலங்கை நிர்வாக சேவையில் தரம் 1 பதவியை வகித்த ஒரேயொரு யாழ்ப்பாண முஸ்லிம் அமரர் மக்பூல் ஆவார். யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களோடு இணைந்து ஒற்றுமையாகவும், புரிந்துணர்வோடும் வாழவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் சமூக ஒற்றுமைக்காக எப்பொழுதும் செயல்பட்டு வந்த அமரர் மக்பூல் அவர்களது இழப்பு உண்மையிலேயே ஒரு நிரப்பமுடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தி இருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. அன்னாருடைய முயற்சியும், பெயரும் தொடர்ந்து யாழ்ப்பாண முஸ்லிம் மக்களால் குறிப்பாகவும், ஏனைய மக்களால் பொதுவாகவும் நினைவு கூரப்படுமென எதிர்பார்க்கின்றேன்

**சீ. வீ. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

* * *

"தம்மைத் தாமே கட்டுப்படுத்தி, தம் மரணத்துக்குப் பின்னர் பயன் தரக்கூடிய நற்கருமங்களைச் செய்வோர் புத்திசாலியாவர்."

அமுதவாக்கு — நபி (ஸல்).

*An Appreciation*

On the occasion of the 100th anniversary day of the death of Mr. M. M. Makbool, I am pleased to remember our late Government Agent of Mannar. I had been closely associated with him in many of the undertakings for the betterment of the people of Mannar. He always proved himself an able administrator who could handle any difficult situation. By the charm of his personality and his power of persuation, he at all times maintained peace and cordiality among all communities in Mannar. With the sudden demise of Mr. Macbool, we have lost an able administrator and a good friend of the people of Manner. On this occasion once again we offer our sympathies and concern to his family members.

*" With You he faced death's night*
*Sealed with your victory sign*
*Soon may the splendour of your Light*
*On him for ever shine."*

**† Thomos Saundranayagam,**
**Bishop of Mannar.**

**Bishop's House,**
**Mannar.**
**21-04-1988.**

❋ ❋ ❋

**Creation is for just ends, and Falsehood**
**Is but straying from the Path:**
**Say what people may**
**Truth Carries its own vindication:**
**Follow it firmly. Let age think of youth,**
**And youth not turn rebellious. Thereare fine**
**Gradations in the kingdom of God: then strive**
**For the best. Let not pride and arrogance**
**Undo you: the humble are often the best**
**Recipients of Truth. All will come right**
**In good time: so persevere with patient firmness**
**Of purpose. Justice that seems to tarry**
**Comes really on swiftest foot but sure.**

*Holy Quran C. 219 (xivi 1 — 35)*

# மறைந்தும் மறையாத மக்பூல்

சிவந்த நிறம், நிமிர்ந்த நடை, நேரிய நன்னேக்கு எளிமையான தோற்றம் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு இப் பண்புகளை அணிகலன்களாகக் கொண்டவர்தான் ஜனப். எம். எம். மக்பூல். அவர் இன்று எம் மத்தியில் இல்லை. மறைந்துவிட்டார்; எனினும் அவரது செயற்பாடுகள் உயர்ந்த எண்ணங்கள், நற்குணங்கள் திடமான முடிவுகள் மறையாத மறக்கமுடியாத மக்பூலாக எம் மத்தியில் திகழவைக்கின்றன.

முதன் முதலாக சுயமொழி மூலம் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்கும் வாய்ப்பினைப்பெற்றோர்களுள் அமரர் எம். எம். மக்பூலும் ஒருவராவர். அவரே தமிழ் மொழி மூலம் முதன் முதலில் பொதுத்துறைப் பட்டத்தில் திறமைச் சித்தி பெற்ற சிறப்புப் பட்டதாரியாவார்.

பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற அதே ஆண்டில் கலகெதர எனும் ஊரில் ஆசிரியத் தொழிலை ஏற்றார். 1967-ம் ஆண்டில் வங்கிச் சேவையில் அவர் தம்மை இணைத்துக்கொண்டார். கொழும்பு மாநகரின் இலங்கை வங்கியில் திறமை மிகு வங்கி அதிகாரியாக அவரைச் சந்திக்கும் வாய்ப்பினை நான் பெற்றேன்.

ஆனல் மிகக் குறுகிய காலத்துள் ஒரு திறமையான நல்ல இன்முகமுடைய வங்கி அதிகாரியின் சேவையை இழக்கும் நிலை ஏற்பட்டபோது நானும், தாபனத்தைச் சார்ந்த அனைவருமே கவலையுற்றோம். ஆனாலும் அன்னாரின் அரும்பெரும் சேவை ஏழை மக்களுக்கு, கிராமிய மக்களுக்கு பயனுடைய அரச நிர்வாக சேவைக்கு இணைகின்றது என ஆறுதலும் மகிழ்வும் அடைந்தோம்.

இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்த சிறிது காலத்திலேயே படிப்படியாக உயர்வுகள் பெற்று வெளிநாடு சென்று பயிற்சியும் பெற்று அரச அதிபராக பதவி ஏற்றார். இளவயதினில் பெரும் வளர்ச்சி கண்டார். இஸ்லாமிய சமுதாயத்திற்கும் குறிப்பாக யாழ். முஸ்லிம்களுக்கும் பெருமை தேடிக்கொடுத்த பெருமகன் ஆனார்.

இலங்கை வங்கிச் சேவையில் நின்றும் அவர் பிரிந்த பொழுது இனி எப்போது இந்த இனியவரைச் சந்திப்பேன் என்று நினைத்த எனக்கு 1973-ம் ஆண்டில் ஓர் இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. நான் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளராகச் சென்றபொழுது மக்பூல் எனும் அப்பெரியோனை கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரியாகச் சந்தித்தது மட்டுமன்றி இருவரும் ஒரே அறையில் தங்கும் வாய்ப்பினையும் பெற்றேன். எங்கள் நட்பு மேலும் இறுக்கமடைந்தது. அந்தக் காலம் எமது நட்பின் பொற்காலம். அக் காலத்தில் அமரரது நற்பணிகளைக் கண் கூடாகக் கண்டேன். இதயபூர்வமாக அனுபவித்தேன்.

ஏழை மக்களும், கற்றறியாப் பாமர மக்களும் அதிகமாக வாழ்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக அன்னர் அல்லும் பகலும் பாடுபட்டார். கனகாம்பிகைத் திட்டம், திருவையாறு படித்த மகளிர் திட்டம் என்பன அன்னரது கைவண்ணங்களே!

தேவையென்று வந்தவர்களை அரவணைத்து தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வது அவருக்குக் கைவந்த கலை; வேதனையுடன் வருபவர்கள் மனக்களிப்புடன் திரும்புவார்கள் — இது அவரது தனித் திறமையாகும். எடுத்த காரியத்தைச் செப்பமுடன் திட்டமிட்டபடி செய்து முடிக்கும் செயல் வீரர் அவர்.

இன்று அவர் எம்மத்தியில் இல்லாது மறைந்தும் அவரது செயற்றிட்டங்கள் அவரது நாமம் கூறி நிற்கின்றன. மறையாத மக்பூலாக அவர் நாமம் என்றும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலைபெற்றுள்ளது. இளமையில் அவர் அமரராகியமை அவர் தம் சேவையில் வளர்ந்தோருக்கும், வாழ்ந்தோருக்கும் பேரிழப்பாகும். அவர் சேவையைத் தொடர்ந்தும் பெறும் வாய்ப்பளிக்கப்படாமை நாம் செய்த துர்ப்பாக்கியமாகும்.

அவரது இழப்பால் தாழவொண்ணு மன வேதனைக்கு ஆட்பட்டிருக்கும் அன்னரது குடும்பத்திற்கும், அவரது அளப்பரிய சேவையைக் குறுகிய காலத்தினுள்ளேயே இழந்து நிற்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் ஆறுதல் கூறுவதைத் தவிர நாம் யாதுசெய்வோம்?

அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

யாழ்ப்பாணம்
12-04-88

க. திருநாவுக்கரசு
பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

# "கரை காட்டும் கலங்கரைத் தீபமே.... அணைந்தனையோ...."

*1981-2-1-ம்* திகதியில் மன்னார் மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவியேற்ற எங்கள் அன்பின் சிகரம் மக்பூல் ஐயா அவர்கள் *1981-4-22-ம்* திகதியில் வெள்ளாங்குளம் படித்த வாலிபர் குழாய்க் கிணற்றுத் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் எமக்கு அறிமுகமாகிக் கொண்டார்.

மலையில் அருவிய நீர் கடலில் சங்கமமாவதைப் போன்று பல திக்குகளில் வாழ்ந்த எம்மை முப்பது பேர் கொண்ட குழாமாக்கினார். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் உள்ள எங்களைத் தெரிவுசெய்து எமக்குக் காணிகளைத் தந்தார். காடு வெட்டவோ வேறு எவ்வேலைகளைச் செய்யவோ பணவசதியற்ற எமக்கு அவரது கடும் முயற்சியால் பல உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தலா 6800/- ரூபாவை மானியமாகப் பெற்றுத் தந்து எமது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்து வைத்தார்.

உப்பானது தன்னை உருக்கி உணவிற்கு உருசி அளிப்பதுபோன்று தன்னலன் நோக்காது சனி ஞாயிறன்றோ அன்றேல் இரவு பகல் என்றோ மழை வெய்யில் என்றோ பாராது ஓடோடி வந்து எம்முடன் அதிகாரிக்கு அதிகாரியாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் தோழனுக்குத் தோழனாகவும் பாரதி கண்ட கண்ணனைப்போல் எம்முடன் ஒன்றிணைந்து எமது வாழ்க்கைப் பாதையை ஒழுங்கமைத்தார்.

எமது அணையா விளக்காக அன்று அவர் ஏற்றிய விளக்கின் ஒளியில் வாழ்க்கையை ஆரம்பித்த நாங்கள் இன்று பொருள் வளமும் சுகவாழ்வும் பெற்று வாழ்கின்றோம். அத்தோடு எம்மில் பலரை கடல் கடந்து அந்நிய நாடு சென்று பொருள் சேர்க்கும் அளவிற்கு ஆளாக்கி விட்டு இன்று எம்மை விட்டுத் தான் மறைந்துவிட்டார்.

கரைகாட்டும் கலங்கரைத் தீபமாக எமக்கு அவர் கற்றுத்தந்தது எத்தனை! எத்தனை! நிர்வாக முறையை எமக்குக் கற்றுத் தருவதற்காக சங்கத்தினை ஆரம்பித்தார். சகல துறைகளிலும் முன்னேறி வளர்ச்சியடைந்து முன்மாதிரியாக விளங்கியது எம் பண்ணை. பிறந்த குழந்தை தவழ்ந்து நடக்கும் பருவத்தில் அதனை அத்தந்தை பார்த்து மகிழ்வதை விரும்பாத அந்த இறைவன் தன் 'சதி' மூலம் அவர் விதியை முடித்து எம்மிலிருந்து அவரைப் பிரித்து விட்டான். தந்தையை இழந்த பிள்ளைகள் நாம். மேய்ப்பன் இல்லாத மந்தைகளாகினோம்! கலங்கினோம்! கதறுகின்றோம்!

மர்ஹூம் மக்பூல் ஐயா அவரின் பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் அழியவில்லை. எம்மைவிட்டு அவருடலைப் பிரிக்க முடிந்த அந்த இறைவனால் அவர் விட்டுச் சென்ற அன்பையும் பாசத்தையும் பிரிக்க முடியுமா? அது எம்மில் இருக்கும்வரை அன்பர் எம் மத்தியில் வாழ்ந்துகொண்டே இருப்பார்.

அவரது பிரிவால் மனம் வருந்தும் துணைவியார், மக்கள், பெற்றோர், உற்றார் உறவினர் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திட்டப் பெறுப்பதிகாரியும்,
படித்த வாலிபர் குழாய்க்கிணற்றுத்திட்ட
உறுப்பினர்களும்.,

வெள்ளாங்குளம்.
*18-03-1988*

*An Appreciation*

The assassination of Mr. M. M Makbool, Govt. Agent Mannar at the prime of his career was a shocking event that made all of us sad and vulnerable, in a Society that is under duress. Many a public servant has been a victim of the bullet in the recent past, but the brutal gunning down of Mr. M. M. Makbool sent shock waves that reverberated not only in the public service but in the entire Country.

I had the previlege of knowing Mr. M. M. Makbool as a member of the Sri Lanka Administrative Service, and had the good fortune to work with him, when I had occasion to know him more intimately. He was a younger colleague of mine, tall and handsome and always smart in appearance. He had a kind and understanding heart and brought to bear the very same qualities in his Administrative capacity while performing his official duties. He was a specialist in Land Administration and was acutely aware of the problems of the landless peasants. I have no doubt that Mr. M. M. Makbool will live in the hearts of many of the peasants in the wanni, for his tireless, efforts in allocating land to the needy and the helpless.

His death is a loss not only to the Sri Lanka Administrative Service but to the entire Society, and to all those who value decency in public life. His demise leaves an unbridgeable void in the life of his wife and children. May God give them the strength to endure this irreparable loss. I have lost a dear friend and colleague.

Kachcheri,
~~Mullaittivu.~~ Kilinochchi
15-04-88

**D. Vamadevan,** S. L. A. S.
Former Government Agent,
Mannar District.

* * *

True Wisdom sees God's boundless Bounties
To man, and, how all nature is made
To serve mans end. It is due from us
To know our place, discern the limits
Of our knowledge, and see how far above us
Is God's Wisdom and His Law. Let us not
Deceive ourselves. The end of all things
Will come, but the When and the How are known
To God alone, to Whom be all praise

*Holy Quran* C. *184 (xxi 20 — 34)*

# "சேவைக்கு ஒரு செம்மல்"

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற பொய்யா மொழிப் புலவரின் வாக்கிற்கு இலக்கணமாய் தோன்றிய செம்மல் அமரர் எம். எம். மக்பூல் அவர்கள். யாழ். குடாத் தமிழ் மண்ணிலே தோன்றி தமிழ் மக்களுக்காகச் சேவையாற்றி தமிழ் மண்ணும் மன்னாரில் உயிர்நீத்த செம்மலின் இடைவெளியை நிரப்புதல் எளிதானதன்று. சிறந்த நல்லறிவாளன், பண்பாளன், கடமை வீரன், விளையாட்டு வித்தகன். இத்தனைக்கும் மேலாகத் தமிழ்ப் பற்றும், மதப்பற்றும் நிறையப்பெற்றவர். அத்தகைய சிறந்த செம்மலின் பூதவுடல் மறையினும் புகழுடல் என்றும் நிலைத்திருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

யாழ் நகரிலே அவதரித்த அமரர் மக்பூல் அவர்கள் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புவரை யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே கற்று, பேராதனைப்பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்தார். 1963ம் ஆண்டில் பட்டப் படிப்புத் தேர்தலில் முதற்றரமான சிறப்புச் சித்தி பெற்றார். தொடர்ந்து அரசசேவையில் ஆசிரியப்பணியோடு ஆரம்பித்து பிரிவுக் காரியாதிகாரி காணி அதிகாரி, காணி ஆணையாளர், மேலதிக அரசாங்க அதிபர், எனப்படிப்படியாகப் பதவியுயர்வுகள் பெற்று ஈற்றில் அரசாங்க அதிபராக மூவாண்டுகள் சேவையாற்றி மறைந்தார்.

அமரர் மக்பூல் அவர்கள் பல்வேறு துறைகளிலும் ஈடுபாடும், திறமையுமுடையவர் என்பதற்கு அன்னாரது வாழ்க்கை வரலாறு சான்று பகரும். விளையாட்டுத்துறையில் ஈடுபடும் திறனும் அன்னாருக்கு நிறைவிருந்தது. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்கும்போது உதைபந்தாட்டம், கிரிக்கற் விளையாட்டுக்களில் பங்கு கொண்டு வித்தியாலயத்திற்குப் பேரும் புகழும்பெற்றுத் தந்தவர் என்பதை, அக்காலத்தில் யாழ்ப்பாண - மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்புக்களை ஒழுங்குபடுத்தி நடத்தியபோது கண்ணுற்றேன். அக் காலத்திலிருந்து அன்னாரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிட்டியது.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப அரசாங்க பதவிகள் வகித்த காலத்தில் ஆற்றிய சேவைகள் எச்சங்களாக தகுதியுடையவர் என்பதை எடுத்துக்காட்டும். இக்கட்டான காலகட்டத்திலும் கூட கடமையுணர்வோடு 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனக் கருதி மன்னார் மக்களுக்காக அரும்பாடுபட்டுச் சேவையற்றினர்.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட அமரர் அனைவரோடும் இனிமையாகப் பழகும் பண்புடையவர் இன்முகங்காட்டி, எதிர்கொண்டு அனைவர் குறைகளையும் கண்டறிந்து, கேட்டறிந்து தீர்க்க வழிகண்டார்.

நண்பனைய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே நல் சேவகனைய் விளங்கிய மக்பூல் அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக!

யாழ்ப்பாணம்
20-04-88

C. தியாகராசா
கல்வியதிகாரி
முல்லைத்தீவுமாவட்டம்

* * *

# இனிய நண்பர் அமரர் எம். எம். மக்பூல்

இனிய நண்பர் அமரர் எம். எம். மக்பூல் அவர்களின் மரணம் தாங்கொணுத் துயரத்தைத் தோற்றுவித்துள்ளது. வாழ்க்கைப் பயணத்தின் இலட்சிய அந்தத்தை நோக்கி உறுதியோடும், சமூக நலன் பயக்கும் வெற்றிகளோடும் நடக்கவேண்டிய நிலையில், இடைநடுவில் பயணத்தின்பாதை தடுக்கப்பட்டது போல, அமரர் எம். எம். மக்பூலின் திடீர் மறைவு அமைந்துவிட்டது. அமரர் மக்பூலுடன் பல்கலைக் கழகத்தில் சமகாலத்தில் கல்விகற்கின்ற வாய்ப்பினைப்பெற்றவன் நான். அவர்கூடவே உதவிக்காணி ஆணையாளராகக் கடமை புரிந்த இனிய அனுபவங்களைக்கொண்டவன் நான். அவர், மரணத்தின் கொடிய கரங்களுள் சிக்கி எம்மை ஆருத் துயரத்துள் ஆழ்த்திவிட்டுச் சென்ற வேளையில், அரசாங்க அதிபரான அவருடன் கூடவே உள்ளூராட்சி உதவி ஆணையாளரகக் கடமையாற்றியவன் நான். எனவே, ஒவ்வொரு நிலையிலும் அமரர் மக்பூலின் குண நலன்களையும், அசாதாரணமான திறனையும் புரிந்துகொள்ள வாய்ப்பிருந்துள்ளது.

**இனிய நண்பனே,**

உன்னைப்போல் கல்வியைக் கசடறக் கற்றுத் தெளிந்துகொள்ளும் ஆற்றல் ஒரு சிலருக்குத்தான் இயல்பாகவே உள்ளது. பல்கலைக்கழகக் கல்வியாண்டுகளில், பரீட்சைகளில் நீ, ஏனைய மாணவர்களிலும் தனித்துவமானவன் என்பதனை அறியவைத்தாய்! மூன்றுண்டுக் கல்வியில், பட்டப் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சிறப்புச் சித்தி பெற்று உன் திறனை நிரூபித்தாய்! இவ்விலக்கினை அடைய எத்தனை பேரால் முடிகின்றது?

நண்ப, நீ தூய இஸ்லாமியனுக தேவாரங்களுக்கும், திருவாசகங்களுக்கும் பயன் சொல்லும்போது நாம் அளவிலா வியப்புடன் உன்னை நோக்குவோம். மேடைகள் உன் குரலால் அழகு பெற்றன. வார்த்தைகள் உன்னுல் சரியான அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டன நீ, விவாதங்களில் கலந்துகொள்கின்றுய் என்றுல், அங்கு உனது சொற் பெருக்கைச் செவிமடுக்க ஒரு கூட்டமே திரளும். உணர்ச்சி பூர்வமான வெறும் அலங்கார வார்த்தைக் கொட்டல்கள் உனது இளமை வயதில் கூட உன்னிடம் இருக்கவில்லை: ஆம், அறிவு பூர்வமான சிந்தனை வெளிப்பாடுகளாகவே உனது பேச்சுக்கள் அமைந்தன.

அன்பான நண்பனே, கிளிநொச்சியில் காணியற்ற மக்கள் ஆயிரமாயிரமானேரின் துயரைத் துடைத்தவன் நீ. ஒரே அறையில் நான்கு வருடங்கள் ஒன்ருகவே தங்கியிருந்தோம். உனது உழைப்பின் திறனை நேரில் பார்த்து நான் மலைத்து நின்ற நாட்களும் நினைவிலிருக்கின்றன. ஏழை பங்காளனுக நீ வாழ்ந்தாய். உன்னை இறைவன் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

மன்னுர் உனது மரணத்தின் இடமாகவும் அமைந்துவிட்டது. ஏறத்தாள ஏழு ஆண்டுகள் அங்கு கடமை புரிந்தாய். இளவயதிலேயே அரசாங்க அதிபர் பதவியையுமேற்றுய், பதவி உன்னுல் மதிப்புறும் என நாம் நினைத்திருக்கையில் காலன் உன்னை அழித்துவிட்டானே.

மரணம் இனியது நண்பனே — அது இயல்பாகவே எம்மை அணைக்கும்போது. அது கொடியது — இடைநடுவில் தறித்து வீழ்த்தப்படும்போது. நிழல் பரப்பி ஆயிரமாயிரம் பட்சிகளுக்குத் தங்குமிடமாகவேண்டிய நீ அழிந்ததை மறக்கவும் முடியுமோ.

நீ உனது நிர்வாகப் பாதையில் பதித்த கால்தடங்கள் சொரிமணலில் வீழ்ந்தவையல்ல. கருங்கலில் செதுக்கியவை. நீ என்றும் எமதுள்ளங்களில், உன்னுல் இடர் நீக்கப்பட்ட மக்களின் இதயங்களில் வாழ்வாய்.

உனது ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றேன்.

உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் அலுவலகம்
மன்னுர்.

**க. பரமேஸ்வரன்**
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

# Dearest Friend

It is hard to believe that Mr. M. M. Makbool is no more with us in this land of paradise. Yes, it is true that he departed from us so early to the proverbial fulfilment "whom the God loves die young". when there is birth, the death is sure to follow. But the time is uncertain. Fate had placed its cruel hand on him when he was only 45 years old, then he was serving his own people under trail and turbulent conditions prevailing in the country following the ethnic crisis that reached the climax in 1983, for no fault of the present generation.

Mr. Makbool by birth and schooling at Shri Ramakirshna Mission's Vaidyeeshwara Vidyalaya (College) Vannarpannai, Jaffna from Grade six to University entrance class had become a model gentleman as Characterised by Cardinal Newman in his Essay "The Idea of a University". The excerpts of which are:— A gentleman is one who never inflicts pain. This description is both noble and, as far as it goes, accurate. He is mainly occupied in merely removing the obstacles which hinder the free and unembarrassed action of those about him; and he concurs with their movements rather than takes the initiative himself. The true gentleman in like mannar carefully avoids whatever may cause a jar or a jolt in the minds of those with whom he associates, all clashing of opinion, or collision of feeling, all restraint, or suspecion, or gloom, or resentment, his great concern being to make everyone at their ease and at home. He has had his eyes on all his company; he is tender towards the bashful, gentle towards the distant, and merciful towards the absurd, he can recollect to whom he is speaking; he guards against unreasonable allusions, or topics which may irritate; he is seldom prominent in conversation, and never wearisome. He never speaks of himseff except when compelled, never defends himself by a mere retort. He has no ear for slander or gossip, is unwilling to impute motives to those who interfere with him, and interprets everything for the best.

I have had the pleasure and unique privilege of knowing him from Grade six at Vaidyeeshwara which I joined one year before, up to the Degree in the University of Peradeniya. At School he was a brilliant student and he excelled in extra-curricular activities such as the participation in drama, debates and elocution contests in both Tamil and English. He obtained a pass in Sinhala at the J. S. C. Examination conducted by the N. P. T. A. At the varsity he won the love, affection and admiration of the professors and lecturers for his outstanding capabilities in studies, debates and sports... He distinguished himself at the General Arts Degree Examination with honours in 1963.

His desire to serve the community, especially the down trodden lead him to take up to the noble profession — teaching, mainly in the schools in the up Country. His brilliant performance at the B A Examination made him show his merits in the highly coveted and competitive Ceylon Administrative Service Examination in

1965. His first appointment was to serve in Sammanthurai in the Amprai District as D. R. O., during which period the writer was at Pottuvil.

His efficient service to communities all alike gave him a transfer as District Land officer Kilinochchy where he served for quite a long time. The Government recognized his servicces so much so that he was awarded a course of training abroad in the Netherlands ( Holland ).. On his return after Post-Graduate work he served in the Land Commissioner's Department as one of its Deputies, after which he became the District Secretary and Government Agent of Mannar District, preceded for a short period as Additional G. A. His meteorical rise found a pride of place in the Muslim Community and the Tamils of Jaffna — his birth place.

I will fail in my friendship if I don't, at this juncture, quote the words of the Indian Mirror in its issue of 1906 that made the perceptive observation about Sir Ponnnampalam Ramanathan. "The career of Ramanathan is a fit object lesson to the educated youth of India and Ceylon; for seldom does one come across a man of such phenomenal energy as Mr. Ramanathan who is as sound an authority on philosophy, arts, literature and religion as he is on law". Makbool to the Muslims, Tamils and Sinhalese was a Ramanathan in his own way. He always detested injustice and never hesitated nor failed to take up such causes. As D. L. O. Kilinochchy he was never contended with the signing of permits and grants. The mango grove and the coconut palms standing in and around the Land Office and in the precincts of the present Kilinochchi Kachcheri were planted and nursed by him and they bear fruits to the memory of this great soul. It was purely his architect to provide the homeless Muslims of Jaffna with the Pommaiveli Housing Scheme. His dedication to service has found him a place among the leaders of the Muslim Community of Jaffna, the birth right.

In conclusion I take pride in having been a friend of this late great 'Atman' Makbool, whose friendship was as in the verse of Naladiyar: — Bear with Infirmities. None are perfect. "When those to whom with strong desire we clung as good, prove otherwise, keep the sad secret hid, cling to them still! The growing grain has husks, the water has its foam: flowers too have scentless outer sheath of leaves."

Let me and the wife and children of Makbool and his close associates console ourselves at the loss of this great man by taking refuge under Thirukkural of Saint Valluvar. "What is stronger than fate? If we think of an expedient (to avert it) it will itself be with us before (the thought) and the saying of Chellappa Swamiyar to Yogar Swamy of Jaffna.

"எப்பவோ முடிந்த காரியம்"

"*All Destined Before*"

**S. T. Markandu**
Asst Commissioner,
Dept. of Internal Trade.

Kachcheri,
Jaffna.

# புதிய முறை நிர்வாகி

ஜனாப் எம். எம். மக்பூல் அவர்களை நான் முதன்முதலாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961ஆம் ஆண்டு யூலை மாதம் சந்தித்தபோது அவர் ஏற்கனவே பிரபல்யம் பெற்ற மாணவராகவே அறிமுக மானார். அப்போது அவர் கலைப்பகுதி இரண்டாம் ஆண்டு மாணவர்; நான் முதலாம் ஆண்டு மாணவன். நடந்து முடிந்திருந்த பொதுக் கலைத் தகுதிப் பரீட்சையில் அந்த வருடம் மூன்று முஸ்லிம் மாணவர்கள் மட்டுமே தமிழ் பாடத்தில் அதிவிசேட திறமை பெற்றுப் பிரபல்யம் அடைந்தார்கள். அவர்களில் ஒருவர் ஜனாப் மக்பூல்; ஜனாப்கள் அமீர் அலியும் எஸ். எச். எம். ஜெமீலும் மற்றைய இருவர். பல்கலைக்கழகம் பற்றிய எண்ணிலடங்காக் கனவுகளோடு சென்றிருந்த எப்போன்றோருக்கு மக்பூல் ஒரு இலட்சிய மாணவராகவே தோன்றினார். அது மட்டுமல்ல, பல்கலைக்கழக மரபாகிய ''ராக்கிங்'' சேட்டைகளைக்கூட புதிய மாணவராகிய எம்மீது அவர் விடவில்லை என்பதை இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ஆம்! மக்பூல் அவர்கள் ஒரு புதிய மாணவ தலைமுறையின் ஒரு புதிய கலாச்சார பாரம்பரியத்தின் உண்மையான பிரதிநிதி. தாய்மொழி மூலம் பல்கலைக்கழகக்கல்வி என்ற வரலாற்று மாற்றத்தின் முன்னோடி மாணவன். பொதுக்கலைத் தேர்வு இறுதிப் பரீட்சையில் மிக அரிதாககவே பெறப்படும் இரண்டாம் வகுப்பு ( மேல்நிலை ) பட்டத்தைப் பெற்ற திறமைசாலி. ஆயினும், புத்தகப் பூச்சி அல்ல. சகல துறைக ஈடுபாடுகொண்ட மாணவன் பல்கலைக்கழக விளையாட்டுத் துறைகளில் ஆர்வம் காட்டியவர். சிறந்த பேச்சாளர். மாணவர்களின் எந்த அரங்கமேடையும் மக்பூல் இன்றி முழுமையடையாது. கொழும்பு சட்டக் கல்லூரிக்கு எதிரான விவாதப்போட்டிகளில் பல்கலைக்கழகக் குழுவின்முக்கிய பேச்சாளராகப் பலதடவை விளங்கினார்.

பட்டப்படிப்பை முடித்துக்கொண்டவர், ஆசிரியராகப் பணிதொடங்கி, வங்கியதிகாரியாகச் சில காலம் செயற்பட்டு, இறுதியில். இலங்கை நிர்வாகசேவையில் அதிகாரியானார். இருபது வருடங்களாக நிர்வாக சேவையில் பணியாற்றினார். பிரிவுக் காரியாதிகாரியாக, காணி அதிகாரியாக, மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி, நிர்வாகசேவையின் உயர்ந்த பதவிகளில் ஒன்றான அரசாங்க அதிபராகவும், கடமையாற்றித் திடீரென மறைந்தார்.

இவரது குடும்பப் பின்னணி, தாய்மொழிக் கல்வி, எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கொண்ட சமூகப்பிரக்ஞை என்பன இவரை ஒரு சராசரி நிர்வாகியிடமிருந்து வேறுபடுத்தின. ஆழ்ந்த மனித நேசமும், முற்போக்குச் சிந்தனையும், விரைந்து செயற்படும் தன்மையும் அதிகாரத்துவம் இல்லாத அதிகாரியாக இவரை இனங்காட்டின. எப்படி இவரது சமகாலப்பல்கலைக்கழக மாணவர் சிலர், ஆக்க இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் முத்திரை பதித்தார்களோ அவ்வாறே மக்பூல் அவர்களும் நிர்வாகத் துறையில் தனி முத்திரை பதித்தார்.

கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இவருடன் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்ற நான், நிர்வாகியென்ற முறையில் விரைந்து செயற்படும் திறனையும் புதிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி, அமுல்படுத்தும் ஆற்றலையும் அவற்றினூடாக மனிதகுல வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையையும் நேரில் கண்டேன்.

1984 டிசம்பர் மாதத்தில் மன்னாரில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டபோது துடிதுடித்துக்கொண்டு அவ்விடங்களுக்குச் சென்று கண்ணீர் மல்க மக்களுக்கு ஆறுதல்கூறி, தன் சொந்தக் கைப்பணத்தை அம்மக்களுக்கு வழங்கிய காட்சியை என் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை. முறைக்கு முறை, வவுனியா, யாழ்ப்பாணம் பகுதிகளில் நடைபெற்ற வன்செயல்களால் அகதிகளாகி மன்னார் வரும் மக்களை எவ்வளவு பரிவோடு மக்பூல் அவர்கள் பராமரித்தார் என்பதனை நினைத்துப் பார்க்கின்றேன். தனது இறுதி நாட்கள் வரை இடம்பெயர்ந்த மக்களின் நல்வாழ்வுக்காக இடைவிடாது சிந்தித்தும் செயல்பட்டும் வந்தார்.

வன்முறையைக் காரணம் காட்டி மன்னார் மாவட்டத்தின் மிகப்பெரும் பயன்தரும் திட்டமான குடிநீர் விநியோகத் திட்டத்தை ( நெதர்லாந்து உதவி ) இரத்துச்செய்யத்தீர்மானம் எடுக்கப்பட்டதை அறிந்து விரைந்து கொழும்பு சென்று நெதர்லாந்து தூதராலயத்தினரோடு வாதாடி திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்த தனிப்பட்ட உத்தரவாதம் கொடுத்துவந்தவர் மக்பூல் என்பதை எத்தனை பேர்தான் அறிவர்?

கொழும்பிலிருந்து எரிபொருள் வராதநிலையில் மன்னார் அனல் மின்சார நிலயத்தை இயக்குவித்து மன்னார் நகருக்கும் ஒளி பாய்ச்ச அவர்பட்ட அவலங்களை எத்தனை பேர்தான் அறிவர்?

அரசாங்க அதிபர் பணியின் நெருக்கடி காரணமாக வாரத்தில் ஒருநாள் மட்டுமே பொதுமக்கள் அரசாங்க அதிபரைச் சந்திக்க முடியும் என்ற நிலை நடைமுறையில் இருந்தபோதும் தன்னைக் காணவந்த எந்தப்பொது மகனையும் எந்த நேரத்திலும் சந்திக்காமல் அவர் திருப்பியனுப்பியதில்லை. அவரது இல்லம் கூட நேரகாலம் இன்றிப்பொதுமக்களின் இடைவிடாத வருகையை எதிர்நோக்கியபடியே விளங்கியது.

பொதுமக்கள் தன்னைச் சந்திக்க வரமுடியாத நெருக்கடிநிலை உருவாகி வந்தபோது, தானே அதிகாரிகள் சகிதம் அவர்களிடம் சென்றார். நடமாடும் கச்சேரிகளை வெகு சிறப்பாக நடத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை; மாவட்ட சபைத் தலைவர் இல்லை. நிர்வாகிகள் களம் செல்ல போக்குவரத்து வசதிகள்கூட இல்லை; ஆனாலும் மக்களின் அத்தியாவசிய தேவைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டன. மாவட்ட நிர்வாகம் சிறப்புடன் இயங்கியது. அதைக்கொண்டு செலுத்தியவர் மக்பூல் என்னும் சிறந்தோன்.

மின்னுமல் முழங்காமல் திடீரென வீழ்ந்தார்: ஆனல், அவரது சேவையினூடாக அவர் மக்களின் மனதில் நிரந்தரம் வாழ்வார்!

அ. ஜெயரத்தினம்
திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்

கச்சேரி,
மன்னார்.

* * *

## எனதருமை நண்பன்

எனதருமை அன்பு நண்பன்
எல்லோருக்கும் அவன் அன்பன்
தனக்கெனவே வாழா என்றும்
தனிப்பெரும் தலைவன் அவன்
மனந்தனில் வஞ்சமில்லான்
மக்கள் வாழ என்றும் உழைத்தான்
கனமிகு கண்ணிய வாளன்,
கதையினை எப்படிச் சொல்வேன்

வறுமையில் உதயம் ஆனன்
வல்லமை பலவும் பெற்றான்
மறுவிலாக் கல்வி கற்றே
மாண்புறு பணிகள் செய்தான்
ஆறுதல் சொல்லும் வல்லோன்
அவனியில் எவர்க்கும் நல்லோன்
தேறுதல் எவர்தான்சொல்வார்
தெய்வமாய் மறைந்து போனார்.

அன்புடன்
க. கனகரத்தினம்

மக்கள் வங்கி
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

# அனுதாபச் செய்தி

எனது அரச சேவைக் காலத்தில் மிக நீண்ட காலமாக மர்ஹூம் ஜனாப் எம். எம். மக்பூல் அவர்களை அறிந்திருந்தேன். எனினும் அவர்களை நேரடியாகச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் கடந்த நவம்பர் 87ல் தான் கிடைத்தது.

எனது வாழ்நாளில் அதிகமான பல்வேறுபட்ட அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து இருக்கிறேன்; அறிந்திருக்கிறேன் அவர்களுடன் பழகியிருக்கிறேன். ஆனால் சகோதரர் மக்பூல் அவர்கள் இவர்களுக்கெல்லாம் வேறுபட்டவர்.

வடமாகாண முஸ்லீம்கள் மத்தியில் தோன்றிய மூத்த தலைவர் என்றே குறிப்பிட முடியும். முதலாவது அரசாங்க அதிபரும் கூட மர்ஹூம் ஜனாப்மக்பூல் அவர்களே. தனது வாழ்நாளை நாட்டிற்காகவும் நாட்டின் மக்களுக்காகவும் சம்பூர்ணமாக அர்ப்பணித்தவர். சாதி மத வேறுபாடின்றி இஸ்லாமிய கோட்பாடுகளுக்கமைய யாவரையும் சமமாக மதித்துக் கடமை செய்தவர். யாரையும் வேண்டாம் என்று வெறுத்தது இல்லை.

இந்த நாட்டின் அம்பாறை மாவட்ட வாழ் முஸ்லீம்களின் வளர்ச்சிக்காக அத்திவாரமிட்டவர். அதுமட்டுமல்லாது நாட்டின் சகல பகுதிகளுக்கும் தமது சேவையை ஆசிரியர் பதவியிலிருந்து ஆரம்பித்து அரசாங்க அதிபர் வரை செய்தவர்.

குறிப்பாக மன்னார் மாவட்ட வாழ் முஸ்லீம்களின் எதிர்கால சுபிட்சத்துக்காக பாரியதொரு திட்டத்தை வகுத்து அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்று சிந்திக்கும்போதே இவ்விழப்பு ஏற்பட்டது. மன்னார் ஆஸ்பத்திரியில் முஸ்லீம்களின் ஜனாசாக்கள் தனியாக வைப்பதற்கான மண்டபத்தைக் கூட பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நிர்மாணித்து இறுதியாக இறுதியாத்திரையின் வழியிலே நிலை நாட்டினார்.

கடந்த ஆண்டிலிருந்து முஸ்லீம் சமுதாயத்திற்கு ஏற்பட்ட சேதங்களை எவ்வாறு ஈடு செய்து மீள் நிலைக்கு கொண்டுவர முடியும் என்று இரவு பகலாக ஆராய்ந்து தனது சுய முயற்சியில் ஒரு மாதிரித் திட்டமொன்று தயாரித்து நாட்டின் பல பிரமுகர்களுக்குத் தாமாக விளக்க, நிவாரணம் பெற முயன்ற தலைவர். அவரின் திட்டம் இன்று அரசிடம் நடமாடிக்கொண்டிருக்கிறது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

சிவில் நிருவாகம் சீரழிந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல பிரச்சனைகளுக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை இறுதிவரை நிலைநாட்டிய நிருவாகத் தலைவர் என்பதற்கு அவரின் மறைவிற்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தின் நிலை சான்றாக அமைந்துள்ளது.

உண்மையில் மர்ஹூம் மக்பூல் அவர்கள் நல் இதயம் கொண்ட இஸ்லாமியத் தலைவன் என்பதில் சந்தேகமே இல்லை. அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல இந்த நாட்டு முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டிற்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

"தலைவா உனக்கு எமது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக" "யா அல்லாஹ் உனது பேரருளால், 'ஜென்னதுல் பிர்தவ்ஸ்' என்னும் சுவனத்தில் மர்ஹூம் எம். எம். மக்பூல் அவர்களை அலங்கரிப்பாயாக." ஆமீன்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தார், சுற்றத்தாருக்கும் மற்றும் சகாக்களுக்கும் இந்த நேரத்தில் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். எச். எம். காமில், J. P.
பிரதிப் பணிப்பாளர்,
வக்பு பணியகம்,
முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Member Colombo M. C.
Secretary
Muslim Refugee Rehabilitation Committee.

# A note of Appreciation to Marhoom M. M. Makbool

It was a great pleasure to have associated with Marhoom M. M. Makbool, Additional Government Agent-Lands, Mannar and Subsequently as Govt. Agent Mannar. He was well cultured and much devoted to his religion following strictly the principles of Islam. This great quality reflected a good leadership and encouragement to his community.

He and I were given the task of finalizing the District Agricultural Plan. Despite his being a non-Technical Officer, it was very appreciative to note his fore-thoughts, quickness and accuracy in the assessment of agricultural needs. This exhibits his talents in executing other functions.

A major reform introduced in land work was the re-organization of the abandoned Educated Youth Tube Well Project at Vellankulam. This scheme was started around 1972. The participants gradually abandoned the scheme within a few years and reforestation got accelerated. Marhoom Makbool on assumption of duties as Additional Government Agent Lands gradually re-vitalized the scheme recruiting new energetic youths. This became his pet scheme and converted into new landscape, and a productive venture. During the first season, they earned profits. He gradually expanded and accommodated more youths. They are, today independent earning members with good saving habits taught by him. This scheme stands as a monument to his contribution to his genuine welfare efforts.

While he was very actively involved in new ventures for the benefits of the Mannar Public, the Government recognized his capabilities and suddenly transferred him to Ampara District as Addl. Govt. Agent with the intention to organize a Kachcheri at Kalmunai. Although this was a surprise and displeased yet he proceeded without any protest leaving Mannar a close station to his native place Jaffna. This clearly demonstrates his duty conscince and readiness to serve anywhere as a loyal Government Servant.

Perhaps due to his greater affection for Mannar, the duration of his stay at Ampara was short and he returned to Mannar in the capacity of Government Agent.

Since I have associated with him, I am aware of his several plans for the development and improvement in various fields to increase the standard of living especially among the poor masses of Mannar District. Some of the major plans were to re-construct and re-shape the demplished buildings in the Bazaar area, tree planting avenues and induced the Lions to initiate the Campaign, the improvements to Children's Park, roads, schools, irrigation infrastructures, Town drainage scheme, etc,, etc. He devoted himself very closely and actively to electricity and Town Drinking Water Scheme. It is no surprise that when Mannar Town was in darkness, he personally carried spare-parts from Colombo to provide lights. The re-commencement of the Hydro Power electricity and drinking water schemes are due to his personal efforts When Hydro Power lights and water flows from the new augmentation, the name of Makbool will always be remembered by every citizen of Mannar.

Makbool had wide knowledge and good reading habits. In order to impart this, he took active part to re organize the Public Library at Mannar and equipped it with valuable reading materials.

It is very unfortunate that such as a cultured, talented, kind hearted simple person should leave this world so early in age and the country had lost a very Valuable devoted son.

May the Almighty Allah give him a place in Jenetul Firidouze!

**M. C. M. Mustapha**
(Retired Assistant Director of Agriculture, Mannar)

Mannar
20 - 3 - 88

## முஸ்லிம்களின் முத்து

முஸ்லிம் சமூகத்தின் முத்தெனத் திகழ்ந்து முதுபெரும்
அறிஞனாய் புவிதனில் மலர்ந்தீர். நண்பனாய் பல காலம்
கூடி வாழ்ந்த வாழ்க்கை நம் வாழ்நாளில் மறக்கவும்
முடியுமோ? நிர்வாகத் துறையில் நீதியை நிலைநாட்டி
நிலைபிறழாவிடத்தினைப் பெற்றீர். ஏழை எளியவர்
என்றுமே விரும்பும் எதிர்பாரா சேவைகள் பல புரிந்தீர்
அகதியாய் தமிழினம் அல்லலுறும் வேளையிலும்
அன்புக்கரம் நீட்டி அகமகிழ அரவணைத்தீர். கடமையே
பெரிதென கண்ணியமாய் சேவை புரிந்து பெருமையே
பூண்டிருந்த பெருமகனாய் ஆனீர். நிலை குலையா
நெஞ்சினனாய் நினைத்ததெல்லாம் சாதித்தீர்.
மன்னார் மக்களின் தேவை என்ற நிலையுணர்ந்து சேவைகள்
பல செய்த நீர் கடமையிலிருக்கும் வேளையிலே இடையினில்
மடிவதென்றால் இரக்கமற்ற கொடுமையன்றோ......
இத்தனைக்கும் மத்தியில் உம்மை எங்ஙனம் மறப்பது.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
25 - 03 - 1988

K. மாணிக்கவாசகர்
உதவி அரசாங்க அதிபர்

# மறைவிலும் தொடரும் நினைவுகள்

அமரர் **M. M.** மக்பூல் அவர்களை சென்ற இருபத்தைந்து வருடங்களாக நன்கு அறிவேன். அவர் எனது முன்னைநாள் மாணவர்களுள் ஒருவர் எனக் கூறுவதில் பெருமையும் அடைகிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மூலம் உயர்கல்வி ஆரம்பிக்கப்பட்ட பொழுது முதன் முறையாக கற்ற மாணவர்களுள் மக்பூலும் ஒருவராவர். பல்கலைக்கழகத்தில் அவர் ஒரு தலைசிறந்த மாணவனாக விளங்கியதனை இன்றும் நினைவு கூருவதில் மகிழ்ச்சியடையும் அதே வேளையில் அவர் இன்று எம்மத்தியில் இல்லையே என்பது மிகுந்த கவலையினைத் தருகின்றது.

பல்கலைக்கழகப் படிப்பில் சிறப்புச் சித்தியடைந்து பட்டதாரியாக 1963ம் ஆண்டில் வெளியேறினார். அன்று தொடக்கம் அமரத்துவம் எய்திய நாள் வரை அவருடைய தொடர்ச்சியான முன்னேற்றத்தினைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். அம்மகிழ்ச்சி நீடிக்கும் வாய்ப்பு இல்லாமல் போனமை துயரம் தருகின்றது.

சில ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்பூல் அவர்கள் பின்னர் அரசாங்க நிர்வாக சேவையில் சேர்ந்தார். அவருடைய ஆற்றலினாலும், திறமையினாலும், விடாமுயற்சியினாலும் நிர்வாக சேவையில் உயர்ந்த பல உயர்ச்சிகளைப் பெற்றார். இடையே அவர் நெதர்லாந்து சென்று மேற்பயிற்சியினையும் பெற்றுத் தேர்ச்சியடைந்தார்.

அமரர். மக்பூல் அரசாங்க நிர்வாக சேவையில் பல பல பதவிகளிலும் நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றினார். அவர் வகித்த எல்லாப் பதவிகளிலும் எல்லோரும் போற்றத்தக்க முறையில் சேவையாற்றியதனை பலர் அறிவார்கள். மன்னார் அரசாங்க அதிபராக மிகக் கஷ்டமான சூழ்நிலைகளில், பணிபுரிந்த கட்டத்தில் சடுதியாகவும் எதிர்பாராத வகையிலும் அவரின் மறைவு ஏற்பட்டு விட்டது. அது அவருடைய நண்பர்களுக்கும் அவருடன் தொழில் புரிந்த ஊழியர்களுக்கும், உறவினர்களுக்கும் பெரும் அதிர்ச்சியினையும் ஆழ்ந்த கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது. மக்பூல் அவர்களின் மறைவு ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக அமைந்து விட்டது.

யாழ்ப்பாணத்து மண்ணில் தோன்றிய மக்பூல் அவர்கள் முஸ்லிம் சமூகத்தினதும் ஏனையோரினதும் மதிப்புக்குரிய, மனித நேயம் படைத்த ஒரு பெரியாராகத் திகழ்ந்தார். சாதி, மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் அவருடைய எண்ணங்களும், செயல்களும், நிலைப்பாடுகளும் அமைந்திருந்தன.

அமரர் மக்பூல் அவர்கள் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர் ஆவார்.

யாழ். பல்கலைக்கழகம்.
20 - 04 -83

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்
கலைப்பீடாதிபதி

*An Appreciation*

Alas! Valuable lives are lost. Violence that rages the peaceful, pearl of the Indian ocean is unparallel in the history of Sri Lanka. Muslim Community which forms 8% of the total population in this country cannot afford to lose public spirited. service-conscientious men at prime age for no worthy reasons. Very, few muslims hold key positions in public life today. And that too the only Muslim Government Agent serving in the country was shot dead. He was Just 45 years and had a long period to render his service to the community and the Country. makbool. as he was fondly called, died in harness.

Marhoom Meeran Mohideen Makbool who was born on 20-04-1942 was shot dead on 22-01-1988. He hailed from Jaffna and had a love for social service from his school days. He had started several Organisations for social services and sports activities in the North and East and through these Organisations he was able to render service to the needy.

Marhoom Makbool Passed out with honours at the Peradeniya University in 1963 He entered the Sri Lanks Administrative service in 1967 and served in various parts of the Island as D. R O, D. L O Additional G. A. and became the G. A. for Mannar by hardwork and dedication.

Marhoom M. M. Makbool S. L. A. S class I took a keen interest in providing redress to the thousands of refugees. He had put up housing schemes on self- aided basis for those who were affected. at Pommaiveli in 1978 He was a tri-lingualist and was loved by all, irrespective of caste, creed or colour.

He was the Government Agent for Mannar and was in the thick and thin of the problems faced by the people due to violence that raged the Nothern and Eastern Province of the Country. He worked day and night for the well-being of the people.

The Muslim Community has lost an educated and service - conscientious young man and the Country has lost a dedicated Public servant whose services were appreciated by the people especially those affected in violence in the North and East.

May Allah shower his Blessings on one who lived for others and shed his life in the service of humanity.

Inna Lillahi wainna Ilaihi Rajioon.

**M. Haleem Ishak, M. P.**

**77, Dr. N. M. Perera Mawatha**
**Colombo —8,**

# ஜனுப் எம். எம். மக்பூல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961 ஆம் ஆண்டு எனக்கு அறிமுகமான ஜனுப் மக்பூல் காலப் போக்கில் நெருங்கிய நண்பராகவும் விளங்கினுர். பின்னர் ஆசிரியராக, நிர்வாக சேவை அதிகாரியாகப் பல பதவிகளை வகித்த காலத்திலும் எமது நட்பு தொடர்ந்து நீடித்தது. ஜனுப் மக்பூல் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த காலத்தில் கல்வித் திறன் மிக்கவராகவும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளும் மனப்பாங்கும் ஆற்றலும் கொண்டவராகவும் விளங்கினுர். இவர் பொதுக்கலைமாணித் தேர்வில் 2 ஆம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தது இவரது கல்வித் திறனைக் காட்டுவதாகும். பல்வேறு விவாதங்களிலும், கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு தனது பேச்சாற்றலையும், விவாதத்திறனையும் வெளிப்படுத்தினுர். பல்கலைக்கழகத்தில் ''தமிழ்ச் சங்கம்'', ''முஸ்லீம் மஜ்லிஸ்'' என்பன நடத்திய பல போட்டிகளில் பங்கு பற்றிப் பல பரிசில்களைப் பெற்றுள்ளார். இவரது நற்பண்புகளும் நகைச்சுவை கலந்த உரையாடல்களும் பலரையும் இவரது நண்பர்களாக்கி விட்டன.

இவர் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கல்முனை, மன்னுர் போன்ற இடங்களில் பல நிர்வாகப் பதவிகளைவகித்து. குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களுக்குத் தன்னலமற்ற சேவையை மிக இக்கட்டான அண்மைக்காலங்களில் அளித்து வந்தது பலரும் அறிந்த தொன்றே. கிளிநொச்சியில் மாவட்ட நில அதிகாரியாகவும், கல்முனையில் மேலதிக அரசாங்க அதிபராகவும் மன்னுர் மாவட்டத்தில் அரசாங்க அதிபராகவும் பதவி வகித்து தனது திறமையான நிர்வாகத்திஞல் அப் பதவிக்குப் பெருமை தேடிக் கொடுத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் கரையோரப் பகுதியை கல்முனை மாவட்டமாக உருவாக்க வேண்டுமென்ற நிலையில் இவரது பணி ஆரம்ப நிலையில் பெறப்பட்டது. எனினும் கல்முனை மாவட்ட அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இவரது வாழ்வின் கடைசிப் பகுதி மன்னுர் மாவட்ட மக்களின் நலன்களைப் பேணுவதிலும் குறிப்பாக வன் செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்பில் மிகுந்த அக்கறை கொண்டு அரும் பணியாற்றுவதிலும் அமைந்தது.

இவர் மிகவும் பண்பானவர். தான் பிறந்த யாழ்ப்பாணத்தையோ, மக்களையோ என்றும் மறந்திலர். மதிக்கத்தவறியவரும் அல்லர். இவரது சேவையிஞல் யாழ்ப்பாண மக்கள், குறிப்பாக யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் பெருமை கொள்ளலாம். வாழ்ந்திருந்தால் இவரது மகத்தான சேவையைத் தொடர்ந்தும் பெறும் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கும்.

**பல்கலைக்கழகம்**
யாழ்ப்பாணம்.

**பொ. பாலசுந்தரம்பிள்ளை**
பேராசிரியர் - புவியியல் பகுதி

* * *

**"கல்விமான் முட்டாளை அறிகிருன்; ஏனென்ருல் அவன் ஒருகாலத்தில் முட்டாளாக விருந்தான். ஆனுல் முட்டாள் அறிவாளியை அறிய முடியாது;ஏனெனில் அவன் எப்பொழுதாயினும் அறிவாளியாக இருந்ததில்லை"**

*அலி (றலி)*

# ஜனுப் மக்பூல் மறைவு........

" இதயங்களில் குடியிருப்பவர்களை நினைவுகளிலிருந்து பிரித்து விட முடியாது. இதயங்களை வென்று 'மானுட' சாம்ராஜ்யங்களைக் கட்டியவர்களை யாராலும் தோற்கடிக்க முடியாது."

ஜனுப் மக்பூல் —

இந்துப் பாடசாலையில் பயின்ற இஸ்லாமிய மாணவன்; தமிழ் நெஞ்சங்களை தனது உறைவகமாக்கிய முஸ்லீம். மாணவ வாழ்வில் பல சாதனைகளை நிலைநாட்டியவர்; தமிழ் முஸ்லீம் மக்களிடையே பலமான பாலமாகத் திகழ்ந்தவர். பல்கலைக்கழகத்தில் தமிழில் அவர் புரிந்த சாதனைகள் இன்னமும் எவராலும் முறியடிக்கப்படவில்லை.

அவரது கல்வியும், திறமைகளுமே அவரின் முதலீடு, விடாமுயற்சியே அவரது ஒரே ஆயுதம், ஏழைப் பாமர மக்களின் இதயமே அவரது வீடு.

அவருடன் பழகிய அனைவரும் அவருக்கு நண்பனுர்கள். அவரைச் சேர்ந்தவர் உயர அவர் ஏணியாகவிருந்தார்.

உறவினர்களுக்கு அவர் ஆலமரமாகி நிழலாகி நின்றவர்.

ஒரு சம்பவம் —

விஸ்வமடு, படித்த வாலிபர் தெரிவு; ஒரு விண்ணப்பதாரி கல்வி வாசனையே இல்லாதவர்; தனது ஏழ்மையையும் திறமையையும் மட்டுமே தகுதிகளாக மக்பூல் முன் வைத்தார். சகல சட்ட நடைமுறைகளையும் விட்டெறிந்து அவ்வேழைக்கும் காணி வழங்கிய அந்த நிகழ்வு இன்றும் மனதை நெகிழவைக்கின்றது. இப்படிப் பல......

அவர் மறைவு முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். மானுடத்தை நேசித்த இந்த மனிதனின் மறைவு ஈடு செய்ய முடியாதது. அன்பு நெஞ்சங்களால் மறக்க முடியாதது.

கண்ணீர்த்துளிகளை அஞ்சலிகளாக்கி
சி. பற்குணம்,
உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

கச்சேரி
யாழ்ப்பாணம்,
88-04-04

* * *

நிச்சயமாக இறைவன் உங்களது உடல் தோற்றத்தையோ, உருவ அமைப்பையோ நோக்கமாட்டான்: உங்களது இதயங்களையே கவனிப்பான்.

அமுதவாக்கு — நபி (ஸல்)

## *An Appreciation*

It is always a sad duty to perform to refer to a death of any individual, but it is painful and agonising to refer to the death of someone whom one had known very well. I am in this predicament.

I have known the late M. M. Makbool since his childhood. My earliest recollection of him was when he was being escorted to Mazrauddin school by a near relative of his, in the early forties. Though his parents were not that affluent, they had sufficient means to provide him with the basic facilities to enable him to go through a University education. He manifested a keeness for studies from his kindergarten, which did not abate throughout his University career and even thereafter. The several achievements of his in the sphere of studies bore ample testimony to his keen intellect. He measured up to the expectations of the members of his family, his numerous friends and wellwishers by securing a place for himself in the Administrative Service of this country. After the abolition of the Ceylon civil service, in the fashion of every bright student barring those that entered the professions, the late Mr. Makbool carved out a place for himself in the Administrative service. By diligent work he reached almost the top of the service by getting appointed as the G. A. for Mannar at a comparatively young age of forty two.

Although I had no occasion to observe and assess him in the performance of his official functions, the report that I received from my numerous friends in the North and elsewhere who knew him was that he was a good public relations officer who was always humane in his approach to problems that he was called upon to solve, as a public servant of this country.

I have always found him as one who maintained the continuous touch with the common man and the underpriviledged, irrespective of caste, creed and religion. The offices that he held had sat lightly on him. He was always unassuming, cheerful and kept everyone who went before him at ease.

He was a keen student of Tamil and was deeply immersed in the study of its vast literature from the Sangam period to the modern era. When I had the occasion to meet him and could spare little time, I had always enjoyed his companionship particularly when it came to a discussion touching the beauties and the greatness of the Tamil Language, and its inexhaustible literature.

Everything That is created by Almighty in this Universe has to perish and will be rent asunder is a creed with every muslim It is this faith in the inevitability of death and eventual decay that serves as a consolation when one considers the untimely and tragic death of the late M. M. Makbool.

May the doors of Jennathul Firdows be kept open for the repose of his soul.

Colombo
15-04-1988

**S. H. M. Sahidu**
**Advocate**

# அணையாத தீபம்

உடல் பிரிந்தாலும், நினைவில் அன்றும், இன்றும் என்றும் எமது உள்ளக்கமலத்தில் வீற்றிருக்கும் அமரர் திரு. எம். மக்பூல் அவர்களின் பிரிவு என்னை ஆறாத்துயரில் மூழ்கடித்துள்ளது. கடந்த 17 வருடங்களாக அவருடன் பல்வேறு மாவட்டங்களிலும் சேவையாற்றி அதில், நான்கு வருடங்கள் அவருக்குக் கீழ் நேரடியாக சேவையாற்றி அவரைப்பற்றி எடுத்தியம்பக்கூடியவராய் உள்ளேன்.

ஈழவழநாட்டிலே சகல வளங்களும் கொண்ட யாழ்ப்பாண நகரிலே பிறந்து சகல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்று வாழ்க்கையில் வல்லவராக ஒரு மாவட்டத்துக்கே அரசாங்க அதிபராகத் திகழ்ந்தார் 'விளையும்பயிரை முளையில் தெரியும்' என்பதற்கிணங்க சிறுபராயத்திலேயே உற்றோரும், மற்றோரும் மெச்சத்தக்க முறையில் சிறந்து விளங்கினார். பல்கலைக்கழகத்திலே கலைமாணித்துறையிலே முதன் முதலாக சிறப்புச் சித்தி எய்திய முதல் மகன் யாழ்படைத்த பெருமகனான திரு. எம். மக்பூல் ஆவார்.

அவர் பிரதிக்காணியாணையாளராக இருந்தகாலத்தில் தனது பதவியை திறம்பட வகித்ததனால் வெளிநாடு சென்று பயிலக்கூடிய வாய்ப்பையும் பெற்றார். அவர் மேலதிக அரசாங்க அதிபராக, பின்பு அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் எந்தப் பொதுமகனையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களது பிரச்சனையை தீர, அமர ஆலோசித்து முடிவுகளையும் உடனுக்குடன் எடுத்து வந்தார். பின்போடுவது என்பது இவரது வாழ்கை அத்தியாயத்திலே இருந்ததில்லை. மின்னாமல் முழங்காமல் திடீரென மறைந்துவிட்டார் அவர். அவரது மரணத்தை ஜீரணிக்கமுடியாத அவரது குடுபத்தினரும், உற்றாரும், நண்பர்களும் அல்லலுற நேர்ந்துள்ளது.

இளமையிலே நிர்வாகத்துறையில் கால்நூற்றாண்டுகால சேவையாற்றி முற்றிப்பழுத்த இந்த நிர்வாகியின் இழப்பு மன்னார் மாவட்டத்துக்கு மாத்திரமல்ல நாட்டிற்கே ஒரு இழப்பாக அமைந்து விட்டது.

ஜனாப். எம். மக்பூல் அவர்களின் எதிர் பாராத மறைவினால் அவரது இளம் துணைவியும் சிறு குழந்தைகளும் தமக்கு வழிகாட்டும் தலைவனை இழந்து துவள்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவன் அவர்களது நீண்ட வாழ்க்கைப் பயணத்திலே தைரியத்தையும், ஊக்கத்தையும், ஆக்கத்தையும், ஆதரவையும் வழங்குவாராக. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக; அவரது புகழ் அணையாத தீபமாக ஒளிரட்டும்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**சொ. அமிர்தலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்

---

"ஒருவர் தம்பொருளை மனமிசைந்து உமக்குக் கொடுக்காதவரை
அதை நீர் பெறுதல்கூடாது"

அமுதவாக்கு — நபி (ஸல்)

# நான் அறிந்த மக்பூல்

மர்ஹூம் எம். எம். மக்பூல் அவர்களை வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மாணவனாய் இருந்த காலம் தொட்டு நான் நன்கு அறிவேன். மாணவனாய் இருந்த காலத்திலேயே நல்ல பண்பும் முதன்மையூக்கமும் அவரிடம் வெளிப்படையாக காணக் கூடியதாக இருந்தது. பின்பு உயர் கல்வி கற்றுப் பட்டம் பெற்று ஒரு சில காலம் ஆசிரியராக பணி புரிந்து, அரச நிருவாகத் துறையில் சேர்ந்து, மன்னார் மாவட்ட அரச அதிபராக கடமையாற்றியது யாவரும் அறிந்ததே. இக் காலகட்டத்தில் அவருடைய பண்புக்கேற்ப மனிதாபிமானத்தோடு மக்களுக்கு சேவை செய்வதில் முன் நின்று உழைத்தார். அவர் கல்வி, சமூகத்துறை, வீடமைப்புத் திட்டம் முதலிய மக்களோடு தொடர்புள்ள பிரச்சனைகளில் எல்லாம், தம் பங்கை செலுத்த வேண்டும் என மிக ஆர்வத்தோடு உழைத்தமை யாழ். முஸ்லிம் மக்கள் நன்கு அறிவார்கள். எந்த வித பாகுபாடும் இன்றி எல்லோரோடும் பழகும் சுபாவம் உடையவராகத் திகழ்ந்தார்.

சேவை மனப்பான்மை மாத்திரமன்றி அறிவாற்றலிலும் துடிப்போடு பங்கு பெற மக்பூல் ஒரு போதும் பின் வாங்கவில்லை. தமிழ் அபிமானமும் குறிப்பாக யாழ். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறை பெருமைக்குரியதொன்றும்.

இன்று மக்பூல் நம் மத்தியில் இல்லை. மரணம் எங்கு, எப்பொழுது சம்பவிக்கும் என்பது இறைவன் ஒருவனே அறிந்த இரகசியமாகும். ஆகவே "இன்னலில்லா ஹிவ இன்ன இலைஹி ராஜியூன்" என நம்பிக்கையோடு கூறி மர்ஹூம் மக்பூல் அவர்களின் நினைவு என்றும் இருக்க நாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று தான். அதாவது அவர் காட்டிய முன் மாதிரிகளை எடுத்து நடந்து நாடும் நம் சமூகமும் நலம் பெறத் தொண்டு புரிவதே ஆகும். இதை சீர் பெறச் செய்ய இறைவன் அருள் பாலிப்பானாக.

C. M. A. ஜிப்ரி
விரிவுரையாளர்
ஜாமிய்யத்துல் நளீமியா
பேருவளை

*15- 04- 88*

❊ ❊ ❊

"பாவம் செய்து கொண்டே இருக்கையில் பாவமன்னிப்பு தேடுகின்றவர், தம்முடைய இரட்சகனைக் கேலி செய்கின்றவரைப்போல் ஆகிவிடுகின்றார்."

அமுதவாக்கு — நபி (ஸல்)

# ONLY THE ACTIONS OF THE JUST SMELL SWEET AND BLOSSOM IN THEIR DUST

Makbool; You did hear the voice of Allah calling " COME TO HEAVEN-JENNATHUL FIRDOUSE" and you responded.

Never did we believe that a bullet would separate you from us.

But still we believe, you are with us. Certainly you cannot be separated from the thoughts of the Muslim Community.

Dedicated Leader, Orator and Advisor towards the path of righteousness and lofty ideals,

Austere in appearence.

In demeanour, gentle as a lamb.

Simplicity, honesty and charity; Endurance and courage in adversity; you practised and preached.

Quotations from Koran, Hathees and Islamic principles

Enriched your speeches in eloquent tones. Big and small, old and young in rapt attention gave ear with great admiration. For truth is great, It prevails,

Young Prince!

You were a Multi faceted asset to the Muslim Community of Jaffna. Born to fill the void of fifty years, left behind by a Civil servant born in nineteen twenties.

Alas! will the next fifty years see the birth of your ego and personality; Snatched from us at the prime age of forty and five.

Burdened to the trunk with ripened fruits of gifts to all.

" MAC "

As your contemporaries dearly addressed you; You walked with kings but, never lost the common touch.

You talked with crowds but kept your virtue.

Agent of the state, resolute you stood; Dispelled all dangers with fortitude; Trustfully believed neither foes nor friends can hurt you.

Who ever thought that death has dated you; May almighty Allah Bestow you " JENNATHUL FIRDOUSE ".

**S. A. C. Kamil**
Superintendent of Postal Services
Northern Province

Jaffna
14-04-88

# மானுடத்தை மதித்த அமரர்

அமரர் M. M. மக்பூல் அவர்கள் அரச சேவையில் அதியுயர் பதவியொன்றினை வகிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் பலவற்றைப் பெற்றிருந்தும், தனது சமூகத்தினதும், உறவினரதும் நன்மை கருதி அரச அதிபர் பதவியினை ஏற்றார். தனது உறவினருக்கும், தன்னைச் சார்ந்த ஏனையோருக்கும் ஆலவிருட்சமாக நின்று நிழல் தந்தார். முஸ்லிம் சமூகத்தின் பால் தனக்கு நிரம்பிய பொறுப்பு இருந்ததை அவர் அடிக்கடி வெளிக்காட்டியிருக்கின்றார். அவர்களின் எதிர்காலம் எத்தகைய அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது பற்றி ஆழமான கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

தொழுகையும் வாசிப்பும் அவரது கண்டிப்பான கடமைகளாக இருந்தன. முஸ்லிம் கல்விமான்களைப் பற்றிய அவரது ஆராய்ச்சிக் கட்டுரைக்கு வேண்டிய சில உசாத்துணை நூல்களை நான் அவருக்குத் தேடித் தந்திருக்கிறேன்.

மானுடத்தின் பால் மிகுந்த நேசம் கொண்டிந்தார். காடு, கழனி, வாய்க்கால், வரம்பு, தோட்டம், தெரு என்ற இடங்களில் எல்லாம் அப்பாவி மனிதர்களின் உடல்கள் வேட்டையாடப்பட்ட மிருகங்களைப் போல் கிடப்பதைக் கண்டு அவர் கொதிப்படைந்ததை நான் கண்டுள்ளேன். அவர் கண்ணீர் விட்டு அழுததையும் கண்டுள்ளேன்.

எந்தச் சாதாரண மனிதனும் தனது பிரச்சினையை நேரே சென்று எடுத்துக்கூற எந்தத் தடையும் இருந்ததில்லை. ஏனைய உயர் அதிகாரிகளிடம் சாதாரணமாகக் காண முடியாத இந்த எளிமையான பண்பு ஏழை மக்கள் மனதில் அவர் இடம் பிடிக்க ஏதுவாக இருந்தது. மாறி வரும் தேவைகட்கும் சூழலுக்கும் ஏற்ப நிர்வாக அணுகு முறைகள் எவ்வாறு மாற்றம் அடைய வேண்டும் என்பதைப் பற்றி அடிக்கடி கூறிக் கொள்வார். அவரிடம் இருந்து கற்றுக் கொள்ளக் கூடிய பண்புகள் அனேகம் இருந்தன. தொடர்ந்து கடுமையாக உழைக்கக் கூடிய நிறைந்த சக்தி அவரிடம் இருந்தது. எளிமையான சுபாவம் அவரிடம் பிரிக்க முடியாததாக இருந்தது. இச் செய்தியில் அவரைப் பற்றி அதிகம் எழுதுவதற்கு இடம் போதாது. அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் அவரது குடும்பத்தினர் ஆறுதலடையவும் இறைவனது அருளை வேண்டுவோம்.

சி. இரங்கராசா
திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்

மன்னார்
12-03-88

* * *

" தர்மத்தினால் பொருள் குறைந்துவிடாது. மன்னிப்பதனால் சிறப்புக் குறைந்துவிடாது. தாழ்மையினால் உயர்வு குறைந்து விடாது."

அமுதவாக்கு — நபி (ஸல்)

# அனுதாபச் செய்தி

அமரர் மக்பூல் அவர்களைப் பல்கலைக்கழகத்தில் முதல் முதலில் சந்திக்கும் வாய்ப்பை நாம் பெற்றிருந்தோம். தமது கல்வித் திறமையாலும், பிற ஆற்றல்களாலும் அன்றே பல்கலைக்கழக மாணவர் மத்தியில் நற்பெயர் பெற்றிருந்தார். சிலகாலம் ஆசிரியராக இருந்த பின்னர் அவர் நிருவாக சேவையில் சேர்ந்துபல்வேறு இடங்களில் கடமையாற்றிய போது அவரது நிருவாகத் திறமையைக் கண்டு மெச்சும் வாய்ப்பும் நமக்குக் கிடைத்தது. உழைப்பால் முன்னிலை பெற்ற இவர் தமிழ்ப்பேசும் நிருவாக அதிகாரிகள் மட்டத்தில் நல்லதொரு வளமான எதிர் காலத்தைப் படைக்கும் ஆற்றல் பெற்றிருந்தவர். தமிழ்-முஸ்லிம் சமூகங்களைத் தமிழ்ப் பேசும் தேசிய மட்டத்தில் உயர்த்தி எதிர்காலத்தில் இரு பிரிவினரும் அன்னியோன்னியமாக வாழ்ந்து செயல்படுதலே சிங்கள பேரின வாதத்தில் இருந்து சிறுபான்மையினரது நலன்களைப் பாதுகாப்பதற்கு வழி என எண்ணிச் செயற்பட்டவரும் இவராகும் என்றால் மிகையாகாது.

இத்தகைய ஒருவரின் இழப்பு அவரின் அருமை மனைவி மக்கள் ஆகியோருக்கு மட்டுமுரியதல்ல; முழுத் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் ஏற்பட்ட ஒரு பேரிழப்பேயாகும்.

யாழ். பல்கலைக்கழகம்
20-03-88

சி. க. சிற்றம்பலம்
தலைவர்,
வரலாற்றுத்துறை,

---

# பெருந்தகை மக்பூல்

மன்/ பெரியமடு மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு மர்ஹூம் மக்பூல் அவர்கள் காட்டிய ஆர்வத்தை எம்மால் என்றும் மறக்க முடியாது.

1981ம் ஆண்டில் விவசாயப்பண்ணை ஒன்றை அமைப்பதற்கு நாம் முயற்சி செய்த பொழுது மூன்று ஏக்கர் காணி தந்து எம்மை ஊக்குவித்தார்.

1983ம் ஆண்டில் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை எமக்களித்து விஞ்ஞானக் கல்விக்கு ஊக்கமளித்தார்.

பாடசாலையின் பிரதான மண்டபத்தளம் உடைந்து பல வருடங்கள் மாணவர்கள் கஷ்டப்பட்டனர். இதைக் கண்டும் காணாதவர்கள் போல கல்வித்திணைக்களம் நடந்து கொண்ட போது, பன்முக வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கி எமது குறையை நிவர்த்தி செய்தார்.

இவ்விதம் பல சேவைகளைச் செய்த பெருந்தகையை நாம் என்றும் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளோம்.

M. மஹ்றூப்
அதிபர்
பெரியமடு மகா வித்தியாலயம்

பெரியமடு,
மன்னார்.

# கடமையின் உறைவிடம்
# ஜனுப் எம். எம். மக்பூல்

உலகில் எத்தனையோ மலர்கள் மலருகின்றன. அவைகளெல்லாம் மணமும் அழகும் படைத்தவைகளாக இருப்பதில்லை. மணம் படைத்தவைகளிடம் அழகிருப்பதில்லை; அழகு நிறைந்தவைகளிடம் மணமிருப்பதில்லை. சில மலர்களே அழகும் மணமும் படைத்தவைகளாகத் திகழ்கின்றன. இத்தகு மலரைப் போன்று சமுதாயப் பூங்காவிலே மலர்ந்த ஓரழகிய மலர்தான் மர்ஹூம் எம். எம், மக்பூலாகும். உண்மை, நேர்மை, அன்பு, கடமை யுணர்வு, திறமை, அனைத்தும் நிறைந்த எம். எம். மக்பூல் அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. கண்ணீர் வெள்ளத்தோடு தனது இறுதிப் பயணத்தை மேற் கொண்ட அன்னாரைப் பற்றிய கடந்த கால நினைவுகள் என்றும் பசுமையானவை. அந் நினைவுகளனைத்தும் அவரது வாழ்க்கையின் முன்னேற்றங்களுக்கான திருப்பு முனைகள். அத் திருப்பு முனைகளிலிருந்து பொறுக்கி எடுத்த சில முக்கிய விடயங்களை இக் கட்டுரையில் எடுத்துரைப்பது அன்னாருக்குச் செய்யும் நன்றிக் கடனை அமையுமென்று கருதுகின்றேன்.

குற்றம் களையும் அறிவுடைச் சமூதாயத்தைப் படைக்கும் ஆற்றல்மிக்க ஆசிரியத் தொழிலில் ஆரம்பத்தில் நுழைந்த மர்ஹூம் மக்பூல் அவர்கள் தனது பணியினைப் பலரும் போற்றும் வண்ணம் செய்து பல மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பி வைத்தார். இவரது ஆசிரியப் பணியினைப் பெற்ற மத்திய மலை நாட்டிலமைந்துள்ள க| கலகெதர ஜப்பார் மகா வித்தியாலயம் உண்மையிலேயே புகழுக்குரியது தான். 1963 ஆம் ஆண்டு க/ கலகெதர ஜப்பார் மகாவித்தியாலயத்திற்கு கல்வி கற்பிப்பதற்காக வந்த மர்ஹூம் மக்பூல் அவர்கள் பெற்றோர், மாணவர் ஆசிரியர் ஆகியோரின் உள்ளங்களை கவர்ந்திருந்தார். எதையும் சாதிக்கும் ஆற்றல், இங்கிதமாகப் பழகும் தன்மை, சமூகத்தின் எழுச்சி பற்றிய சிந்தனை, எதையும் தாங்கும் இதயம், அநீதியைத் தட்டி அடக்கும் ஆற்றல், நீதியை நிலை நாட்டும் துணிவு, தூய்மையும் அன்பும் கொண்ட உள்ளம் இவையனைத்தும் அன்னாரின் வாழ்வினை அலங்கரித்த அழகிய உயர்தரமான கொள்கைகள், இக் கொள்கைகளை ஏந்திப் பிடித்திருந்த அன்னவர் ஈழமணி நாட்டில் புகழ் படைத்த ஒருவராகத் திகழ்ந்தார். க/ ஜப்பார் மாவித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டே C. A. S. பரீட்சை எழுதிச் சித்தியடைந்தார். இப் பரீட்சையிற் சித்தியடைந்தவுடன் அவரைப் பல உயர் பதவிகள் தேடி வந்தன. வங்கியில் உயர்பதவி ஒன்றுக்கு அமர்த்தப்பட்ட அவர் தனது கடமையைச் செய்து வரும் வேளையில் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்தார். மன்னாரின் அரசாங்க அதிபராக அமர்ந்து தமிழ் பேசும் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த அத்தன்னிகரில்லாத் தலைவனை இந்நாடு என்றுமே மறந்து விட முடியாது. எதற்கெடுத்தாலும் சமூகம், தமிழ் பேசும் மக்கள் என்று பேசுகின்ற அத்தலைவரின் பணி மகத்தானது புனிதத்துவம் மிக்கது; புரட்சிகரமானது. கடமை கண்ணானது என்று போற்றிய அத் தலைவனின் மறைவு தமிழ்ப்பேசும் மக்களை சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்தி விட்டது. தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் இணைக்கும் பாலமாக அமைந்து தனது கடமையினை ஒழுங்குறச் செய்த ஒருத்தமனை இன்று நாம் இழந்து தவிக்கின்றோம் ஈடுசெய்ய முடியாத இப் பேரிழப்பு எமது அங்கங்களைத் தாக்கி நிலைகொள்ளாது தவிக்க வைக்கின்றது.

மர்ஹூம் மக்பூல் அவர்கள் மரணதேவதை தன்னை அரவணைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர். தான் சேவை ஆரம்பித்த கலகெதரைக்கு மனைவி சகிதம் விஜயம் செய்தார். ஏற்கனவே பழகிய பலரின் இல்லங்களுக்குச் சென்றார். ஒரு சந்தர்ப்பத்தில் இங்குள்ளவர்கள் ''அங்கு பிரச்சனைகள் இருந்தால் போக வேண்டாம்'' என்று கூறியபோது; ''உலகில் எங்கும் தான் பிரச்சனைகள் உண்டு. அதற்காகக் கடமையை உதாசீனம் செய்ய முடியுமா? மரணம் என்றாவது வந்து தானே தீரும் இறைவனின் நாட்டம் எப்படியோ. அப்படியே நடக்கும்'' என்று கூறியது தீர்க்கதரிசனமான கூற்றாகி விட்டது.

கடமை அழைத்தது; அவருக்கு உயிர் பெரிதாகத்தெரியவில்லை. ஒரு வீரன் ஒருமுறைதான் இறக்கிறான், என்ற தத்துவத்தை நிரூபித்துச் சென்ற அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்போமாக.

எஸ். எம். அன்வர்

மடிகே,
கலகெதரை.

*An Appreciation*

The tragic and untimely death of Mr. M. M. Makbool, the Government Agent of Mannar, at a comparatively young age of 45 years has left all those near and dear to him in a state of shock and grief. It is difficult to believe that he is no more. His sudden and premature demise has removed from our midst a true and sincere personality, the memories of whom will remain forever in the hearts of all those who knew him.

Born in a middle class Muslim family in Jaffna Mr. Makbool had his early edcuation at Vaidyeshwara Vidyalaya, Jaffna. He was one of the few students who entered the University for the first time from that institution.

After graduating from the Peradeniya University, he entered Government service and through sheer perseverance and hard work rose to the position of a Class I Officer in the Sri Lanka Administrative Service. As a Government Officer he was a very conscientious worker dedicated to his duty. He was very popular with his superiors as well as his subordinates. He was a pleasant person, unassuming and ever willing to help all and sundry. The large and distinguished gathering present on the day of his funeral bore ample testimony to the popularity and esteem in which he was held by his numerous friends, relations and colleaques.

Mr. Makbool was a devoted husband and a loving father. His sudden demise is an irreparable loss not only to his beloved wife and three chidren but also to his friends and close relatives who always came to him for his advice on various matters. It is also a great loss to the Muslim community of Sri Lanka which has only a handful of its members holding high Government offices.

May Allah grant him the Jennathul Firdhouse.

Jaffna
10-03-88

**M. M. Munsoor.**
Attorney At Law

* * *

Be not engrossed in things ephemeral,
To the neglect of higher things in life.
Life is but short, and Death will soon claim you.
Oh that men would only learn.
Before it is too late, the serious
Issues of the higher life! They must
Taste the consequences of their neglect.
For every good enjoyed they must
In the Hereafter give a strict account.

*The Holy Quran C 282 (cii—1-8)*

# சேவையின் சின்னம்

மர்ஹூம் மக்பூல் அவர்கள் எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர், சேவை மனப்பான்மை, சமூக உணர்வு, நேர்மைத்திறன், அடக்க சுபாவம் முதலிய நற்குணங்கள் நிரம்பிய ஓர் உத்தமராக வாழ்ந்தார். இளம் வயதினிலேயே, அவரது சேவை தடைப்பட்டமை, இந் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் சேவையால் நேரடியாகப் பயனடைந்தோருள் வவுனியாவாழ் முஸ்லிம்களும் அடங்குவர்

வவுனியாவில் ஓர் அரபுப் பாடசாலையை நிறுவுவதற்கு நாங்கள் சில காலமாக முயற்சித்து வந்தோம். கட்டடம் அமைப்பதற்கான காணியைப் பெறுவதில் பாரிய சிரமம் ஏற்பட்டது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் அமைந்த காணியைச் சுவீகரித்துத் தரும்படி நாங்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தோம் பல திசைகளிலுமிருந்து ஆட்சேபனை கிளம்பியதால் அது கைகூடவில்லை; மனம் தளர்வடைந்தோம். அவ்வேளையில் மர்ஹூம் மக்பூல் அவர்கள் நிர்வாக சேவைப் பயிற்சிக்காக வவுனியாவில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நாங்கள் அவரிடம் சென்று நிலைமையைக் கூறினோம், எப்படியாவது அக்காணியைப் பெற்றுத்தர வேண்டுமென்று வேண்டினோம். இம் முயற்சிக்குத் தன்னாலான முழு உதவியையும் செய்து தருவதாக உறுதியளித்த அப்பெருமகன் அக்காணிக்கான ஆவணங்களைத் தானே நேரில் கொழும்புக்குக் கொண்டு சென்றார். ஒரு மாதகாலத்தினுள்ளேயே அக்காணிக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்து, மேலும் எமக்குத் தேவையான உதவிகளையும் செய்து தருவதாக வாக்களித்து எம்மை உற்சாகப்படுத்தினார்.

அப்பெருமகனின் உதவியினால் காணி கிடைக்கப் பெற்று அரபுப்பாடசாலையும் நிறுவப்பட்டது. இக் கல்லூரியின் ~~அத்திவாரத்திற்கு~~ அத்திவாரக்கல் அமைச்சர் அல்ஹாஜ் M. H. முஹம்மது அவர்களால் நாட்டப்பட்டது. மர்ஹூம் மக்பூல் அவர்களின் மரணச் செய்தியை நான் இந்தியாவில் நிற்கும்போது பத்திரிகை வாயிலாக அறிந்தேன். கடும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன். ஓரிரு நாளில் இலங்கை திரும்பி வந்து 29-01-88-ல் ஜும்மாத் தொழுகையின் பின்னர் ஜனாசாத் தொழுகையும் நடாத்தி '' ஹதமுல் துவா'' வும்பள்ளிவாசலில் ஓதினோம்.

மர்ஹூம் மக்பூல் அவர்களின் சேவை மனப்பான்மையையும், சமூகப்பற்றையும் வவுனியா வாழ் முஸ்லிம்கள் என்றும் நினைவு கூரக்கடமைப்பட்டவர்கள். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், சுற்றத்தினருக்கும் வவுனியா வாழ் முஸ்லிம்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல நாயன் அன்னாரை ஜென்னது பிர்தௌவ்ஸ் எனும் சுவனபதியில் சேர்ப்பானாக!

நன்றியுடன்,
P. S. அப்துல்லா, J. P.
தலைவர்
முஸ்லிம் அபிவிருத்தி சபை
வவுனியா.

தலைவர்
பரிபாலன சபை
ஜும்மா பள்ளிவாசல்
வவுனியா.

*An Appreciation*

Mr. Makbool shed his mortal coils on the 22nd day of January 19ե8. As a man he endeared himself to all who came into contact with him, both public and friends alike, for he was not only a Good Government Agent but also a social worker par excellance.

Born in a respectable family on the 20th day of April, 1942, he had his early education at Mazrauddeen School and later at Vaideeswara Vidyalayam, from where he entered the Ceylon University.

Before he was made a Government Agent, he held several Staff Appointments. He was extremely popular in his profession. He will be dearly missed by the many who came into contact with him professionally, Socially and personally.

He was instrumental in originating the Pommaiveli Scheme. He also initiated the Pommaiveli Self Aided Housing Scheme. He had in his mind several other plans for his Muslim brotheren when cruel fate overtook him.

I wish to extend my heartfelt sympathy to his wife, children and relations for he had left a void which will be very difficult to be filled especially by our community. More than anything, the community has got reduced to a great extent by this loss.

I pray for him and join his wife and children in their prayer and pains and torments which they suffer in silence.

**S. A. C. MUBEEN**

44, Muslim College Road,
Jaffna.

---

God wishes us to be Clean and pure,
At prayer and at other times.
But justice and right conduct,
Even in the face of spite and hatred,
Are nearest to piety and the love
Of God: in Him we put our trust.

*The Holy Quran* **C.** *70 ( V 7 — 12 )*

## An Appreciation

Mr. Makbool shed his mortal coils on the 22nd day of January, 1978. As a man he endeared himself to all who came into contact with him, both public and friends alike, for he was not only a Good Government Agent but also a social worker par excellance.

Born in a respectable family on the 20th day of April, 1942, he had his early education at Mazraudeen School and later at Vaideeswara Vidyalayam, from where he entered the Ceylon University.

Before he was made a Government Agent, he held several Staff Appointments. He was extremely popular in his profession. He will be dearly missed by the many who came into contact with him professionally, Socially and personally.

He was instrumental in originating the Pommaiveli Scheme. He also initiated the Pommaiveli Self Aided Housing Scheme. He had in his mind several other plans for his Muslim brotheren when cruel fate overtook him.

I wish to extend my heartfelt sympathy to his wife, children and relations for he had left a void which will be very difficult to be filled especially by our community. More than anything, the community has got reduced to a great extent by this loss.

I pray for him and join his wife and children in their prayer and pains and torments which they suffer in silence.

S. A. C. MUBEEN
44, Muslim College Road,
Jaffna.

God wishes us to be Clean and pure,
At prayer and at other times.
But justice and right conduct,
Even in the face of spite and hatred,
Are nearest to piety and the love
Of God: in Him we put our trust.

*The Holy Quran* C. 70 ( V 7 — 12)

பிரச்சினைக்கு ஒரு விடிவு ஏற்படப்போகிறது என்ற மகிழ்ச்சியில் மிதந்தேன். ஆனால் இந்த முயற்சியில் நானும் மக்பூலுடனும் அவரது நண்பர்களுடனும் சேர்ந்து நேரடியாகப் பங்கெடுக்க முடியாத துரதிஷ்டநிலையில் இருந்தேன். அந்த வாய்ப்பை இழந்ததை எண்ணி வருந்தவும் செய்தேன். எனினும் இந்த விஷயத்தை மக்பூலுக்கு எழுதி அடிக்கடி விசாரித்துக்கொண்டிருந்த அதேவேளை வெறும் காணியைக் கொடுப்பதைக்காட்டிலும் அங்கே ஒரு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தால் நல்லது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

"நானும் நண்பர்களும் அப்படித்தான் யோசித்தோம். விண்ணப்பித்தவர்களிடமும் இதனைக் குறித்துப் பேசினேன். வீடமைப்புத்திட்டம் நல்லது; அதனைச்சாதிக்க முடியும் என்றும் நம்புகிறேன் ஆனால் இது நிறைவேறச் சிறிதுகாலம் எடுக்கும் என்றும் சொன்னேன். சிலர் சம்மதித்தாலும் மற்றவர்கள் அதுவரைக்கும் பொறுத்திருக்க விரும்பவில்லை. அவர்களுக்கு நிலப்பசி. காணியைத் தந்தால் போதும் என்று ஒரேபிடியாய் நிற்கிறார்கள்; நிர்ப்பந்திக்கிறார்கள். காணியைமட்டும் பகிர்ந்தளிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று மக்பூலின் பதில்வந்தது.

இதன் பிறகு நடந்தவை எல்லோருக்கும் தெரியும்.

வீடமைப்புத்திட்டம் மக்களின் பொறுமையின்மையால் அமையாவிட்டாலும் பொம்மைவெளி யாழ். முஸ்லிம்களுக்குக் கிடைத்துவிட்டது.

மக்பூல் இதனை நிறைவேற்றியதோடு நின்று விடவில்லை. பொம்மைவெளிப் பெண்களுக்கு, குடிசைக் கைத்தொழிலான பீடிசுற்றும் தொழிலுக்கு தன் நண்பர்களுடன் சேர்ந்து ஏற்பாடு செய்து அதனையும் நிறைவேற்றிவைத்தார். இது பின்னர், முஸ்லிம்களுக்கான ஒரு பீடித்தொழிற்சாலை, தையற்தொழிற்சாலை சவர்க்காரத்தொழிற்சாலை, வாய்ப்புள்ள மற்றும் சில கைத்தொழில்கள் கொண்ட ஒரு தொழிற் பேட்டையை பொம்மைவெளியில் நிறுவும் ஒரு விரிவான திட்டமாக அவர் மனதில் உருவெடுத்தது. இதனை வெளிநாட்டு உதவியுடன் சாதிக்க முடியுமென்ற நம்பிக்கையில், ஆர்வத்துடன் ஒரு வரைபடத்தையும் வரைந்து அதனைக்காட்டி எங்களுடன் விவாதித்தார். ஆனால் எதிர்நோக்கிய சில பிரச்சினைகளால் இத்திட்டம் நிறைவேறவில்லை.

வெறும் வயற்பரப்பாகவும், தரையாகவும் கிடந்த பொம்மைவெளி, உயிரும், உருவும், உணர்வும், கொண்ட குடியிருப்பாக அமைந்ததற்கு மூலகர்த்தாவாக இருந்தவர் மக்பூல். இந்த முயற்சியில் அவர் எதிர்நோக்கிய சிரமங்கள் பல. ஆணிவேராகவும், அத்திவாரமாகவும் இருந்து அவர் உழைத்த உழைப்பு பெரிது.

ஒரு மகத்தான சாதனையை நிலைநாட்டிய, எவரும் போற்றத்தக்கவர். நினைவு கூரத்தக்கவர். மக்பூல் அதற்குரியவர். பொம்மைவெளி, காலம் முழுவதும் மக்பூலின் சின்னமாகத் திகழும். என்றென்றும் நினைவுபடுத்தி நிற்கும்.

10-4-88 — இளங்கீரன் —

❊ ❊ ❊

**பரஸ்பரம் கிருபை காட்டுபவர்களுக்கு கிருபை மிக்கவன் கிருபை செய்கிறான். எனவே மண்ணில் உள்ளவர்களுக்குக் கிருபை காட்டுங்கள். விண்ணெல்லாம் பரந்த இறைவன் உங்களுக்குக் கிருபை செய்தருள்வான்.**

அமுதவாக்கு - நபி(ஸல்)

*An Appreciation*

I am pleased to forward this short sketch of my association with the late Mr. M. M. Makbool, the former Govt. Agent Mannar district.

I knew him first when I was a member of Parliament, Mannar, when he, along with his two or three companions met me in Colombo, requesting me for an introductory note for allocation of a Mosque building fund at Jaffna. He was then a District Land Officer. Thereafter he called on me during my holi days in Sri Lanka on my short visit from Nairobi, Africa, as Sri Lanka's High Commissioner. He was then Additional Govt. Agent, Kachcheri, Mannar.

On my return to Sri Lanka after completion of my service as High-Commissioner, he had closer contact with me on problems of lands for my people at Mannar. I have seen him as an outspoken, reasonable and responsible officer, always willing to help the people in their needs. I have found him, a courteous officer, a helpful gentleman, a willing worker and a compromising friend. His work, strategic dealings with the people and the friendly atmosphere he created in the office made him popular and won him the position as govt. Agent.

As Govt. Agent, Mannar, he did massive work excelling all other earlier officials and won the hearts of many. He was impressive, and quick in formulating policies and plan of actions earning for himself an envious position, placing himself in a high pedestal, dear and liberal in his work and policies.

He is no more with us and the Muslims of Sri Lanka have lost a valued friend, a great public servant and a bright and promising leader amongst them.

May his soul rest in peace.

**M. S. A. Raheem**
**Ex. M. P.,**
**Mannar.**

* * *

**Waste not, nor misuse, your life. Time**
**Through the Ages bears witness that nothing remains**
**But Faith and Good Deeds and the teaching of Truth**
**And the teaching of Patience and Constancy**
**But for these, Man against Time is in loss!**

— *The Holy Quran* ***C 283*** *(Ciii—1-3)*

# ஒரு சகாப்தத்தின் நாயகன்

"நல்லவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை" இது நாம் இன்றுவரை கற்று வருகின்ற பாடம். அந்தப் பாடத்தின் ஓர் அத்தியாயம் மர்ஹூம் மக்பூல் அவர்கள். அன்னாரின் இழப்பு யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல ஈழத்தின் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்டுவிட்ட ஒரு பேரிழப்பு. அவரின் பூத உடல் இன்று நம்மத்தியில் இல்லை என்றாலும் அவரின்புகழ் பூத்த உடல் இன்றும் நம்முடன்வாழ்ந்து கொண்டிருக்கின்றது. என்றும் எம்முடன் வாழும். இருக்கின்றவரை யாரும் உணராத பெருமை இறந்தபின்பு எம் நெஞ்சின் சுமையாகி விடுகிறது. அவர்வாழும்போது புரிந்த பெருஞ் செயல்கள் எம் கண்ணெதிரே மலர்கின்றன. அவை நம்மையெல்லாம் கண்ணீர் சிந்தவைக்கின்றன.

ஒரு சாதாரண சராசரிக்குடும்பத்தில் பிறந்து, கல்வியில் சிறந்து விளங்கி, உயர் நிர்வாகப்பதவியொன்றை அலங்கரித்த மர்ஹூம் மக்பூல் அவர்களின் வாழ்வே ஒரு தியாக காவியமாகும். அடக்கி ஒடுக்கப்படுகிற, சுறண்டப்படுகிற, மக்களின் வாழ்வின் உயர்வுக்காக அயராது உழைத்துக் கொண்டிருந்த ஒரு பெருமகன் இன்று நம்முடன் இல்லை.

அவர் ஆரம்பக் கல்விபெற்ற மஸ்ரஉத்தீன் பாடசாலையும் வைத்தீஸ்வர வித்தியாலயமும் பட்ட, மேற்பட்டக்கல்விகள் கற்ற பேராதனைப்பல்கலைக்கழகமும், நெதர்லாந்து பல்கலைக்கழகமும் அவரால் புகழ் பெற்றன. சிலர் பதவிகளால் பெருமை பெறுகிறார்கள்; ஆனால் மர்ஹூம் மக்பூல் அவர்களால் பெருமை பெற்றவை அவர்வகித்த பதவிகள்.

முஸ்லிம் சமுதாய சேவைபற்றி மாணவப்பருவத்திலேயே உணர்ந்து செயலில் இறங்கியவர் மர்ஹூம் மக்பூல். யாழ்பாண முஸ்லிம் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகராக இருந்து, நெருஞ்சி முள்ளும், கண்ணாடித் துண்டுகளும் தலைகாட்டி யிருந்த ஜின்னா மைதானத்தை, வாழைத்தண்டுகளை உருட்டி விளையாடும் களமாக்கும் பணியுடன் தொடங்கிய சமூகசேவை பொம்மைவெளியில் குழுக்கலவரத்தால் தீக்கிரையான ஏழை மக்களின் வீடுகளைக் கல்வீடுகளாக மாற்றும் நிலைவரை நீடித்தது. பல்கலைக்கழகத்தின் சிறப்புப்பட்டம் பெற்றபின் தெய்வீகப்பணியான ஆசிரியத்தொழிலில் கால்வைத்து கலகெதர என்னும் இடத்திலே பல மாணவர்களைப் பட்டதாரியாக்கினார். பின், வங்கி யொன்றில் உயர் பதவி பெற்று மதிப்புடன் வாழ்ந்த போது நிர்வாக சேவைத் தேர்வில் சித்தியடைந்ததனால் மீளவும் மக்களுக்குச் சேவையாற்றும் மகத்தான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. சம்மாந்துறையில் பிரிவுக்காரியாதிகாரியாகத் தனது பணியினைத் தொடங்கி, கிளிநொச்சியில் மாவட்டக்காணி அதிகாரியாகப் பதவிஉயர்வு பெற்று, இளவயதிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராகப் பணியாற்றும் பேறு கிடைத்தது.

சிலரின் வாழ்வில், பதவி உயரும்போது மனிதப்பண்பு தாழ்ந்துவிடுகிறது. தான்வாழ்ந்த வாழ்க்கையை, தன்னைவாழவைத்த சமுதாயத்தை, நண்பர்களை முற்றிலும் மறந்து விடுகின்றார்கள். இந்தநிலைக்கு முழுவதும் மாற்றமானவர் மர்ஹூம் மக்பூல். பட்டங்கள் உயர்ந்தன, பதவிகள் உயர்ந்தன, ஆனால் மக்பூல் மாறவில்லை. பள்ளியின் சகமாணவனைக்கண்ட அதே பண்புள்ள மக்பூலையே இறுதிவரை என்னால் காண முடிந்தது. காட்சிக்கு எளியனாயிருந்தார். அவர் வாக்கில் கடுஞ் சொல் வந்ததைக்கேட்டதே இல்லை.

ஈவு காலத்தில் யாழ்ப்பாணம் வந்தால் அவரை வீட்டிலே காணமுடியாது. எவ்வித பெருமையும் படாடோபமும் இன்றி அவரின் வரவுக்காகக் காத்துக்கொண்டு வீதியருகே, திண்ணையில் நிற்கும் நண்பர்கள் கூட்டத்தோடு அவர்சங்கமமாகி விடுவார். எத்தனையோ அனுபவங்கள், எத்தனையோ கதைகள்; மனம் திறந்து வாய்விட்டுச் சிரிக்கும் அந்த சிம்மக்குரல் இன்றும் எம் காதுகளில் ஒலிக்கின்றதே! அவர் யாழ்ப்பாணத்தில் நிற்கும் காலத்தில் பின்னேரத் (அஸர்) தொழுகைக்கு இகாமத் (அழைப்பு)'சொல்லும் வரை வெளி விறாந்தையில் நாம் சந்திப்பதுண்டு. அப்போதெல்லாம் அவர் உள்ளம் திறக்கும். எமது சமூகத்தின் வளமான எதிர் காலம் பற்றி அவர் கண்டுகொண்டிருந்த கனவுகள்தான் எத்தனை! அவை யாவும் கனவாகவே போய், விடப் போகிறது என்பதனை அப்போது நாம் எதிர்பார்க்கவில்லை. சில இடங்களில் நாம் முடத்தெங்குகளைக் கண்டிருக்கிறோம். அவை ஒரு வளவில் வளர்ந்து மற்றொரு வளவுக்குப் பலன் தருபவை. யாழ்ப்பாணம் பெற்றெடுத்த பலமுஸ்லிம் கல்விமான்கள் பிறந்த மண்ணுக்குப் பெரும்பணி புரியாது இவ்வாறு முடத்தெங்குகளாக ஆகிவிட்டதை எண்ணி வேதனைப்பட்ட அவர், தானாவது நேரான தெங்குவாக இருந்து தம் மண்ணுக்கு அரும்பணி ஆற்ற நாடினார். ஆனால் அந்தநேரானமரம் கனிதருமுன்னமே வெட்டி வீழ்த்தப்பட்டுவிட்டது.

அமைதி, அன்பு, அறிவு, பண்பு, படாடோபமின்மை, திறமை, தீட்சண்யம், உறுதி என்பவற்றைத் தம் அணி கலன்களாகக் கொண்டு எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்த மக்பூல் அவர்களின் திடீர் மறைவு குறித்து அனைத்து யாழ்முஸ்லிம் மக்களும் சோகக்கடலில் மூழ்கினர். இந்தநாட்டில் நாம் வாழவே முடியாதா! என்று ஏங்கினர்.

நம்மத்தியில் பல்வேறு பாரியதடைகளைத்தாண்டி கற்பவர்கள் சிலர். அவர்களுள்ளும் உயர்பதவிகள் பெறுபவர்கள் அரிதிலும் அரிது. எனவே இத்தகைய நல்லஉள்ளங்கள் நம்மை விட்டுப்பிரிக்கப்படும்போது. யாரால்தான் சகித்துக்கொள்ளமுடியும்.

நாம் எவ்வளவுதான் கூறினாலும் எழுதினாலும் அன்புத்தந்தையின் அரவணைப்புக்காக ஏங்கும் அந்த மூன்று சின்னஞ்சிறுசுகளின், வாழவேண்டிய வயதில் வாழ்விழந்து நிற்கும் அந்தத் தாயின், தமது தாயின் இழப்பின் பின் அமைதிகாண மாமனாரின் அரவணைப்பைநாடிய அந்த மருமக்களின், துயரத்தை அவை ஆற்றிவிடப்போவதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த ஒரு பாடசாலைத்தோழனை, நண்பனை, சமூகத்தொண்டனை ஏழைகள் பங்காளனை, கர்வம் சிறிதுமில்லாத ஒருவனை இனி எப்போது பெறப்போகிறோம்.

மர்ஹூம் மக்பூல் அவர்கள் ஒரு சகாப்தத்தின் நாயகன். அவர்களுடன் ஒரு புதிய சகாப்தம் மூடப் பட்டு விட்டது. அவருக்காக 'ஜன்னதுல் பிர்தவ்ஸ்' என்ற சுவர்க்கப்பதவியை அல்லாஹ் அருளப்பிரார்த் திப்பதல்லால் வேறு எதுதான் எம்மால் முடியும்

**M. S. அப்துல் றஹீம்**
சேவைக்காலக் கல்வி ஆலோசகர்

யா / வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

❋ ❋ ❋

" அன்பினுக்கொரு வேலி, அவமெனும்
துன்பினுக்கு அருந்துாய மருந்து, மீறு
இன்பம் உற்று உறவு ஈண்டிய மெய்தவம்
வன்பு அகற்றிய வாள் பொறை மாட்சியே"

— சீறா —

மர்ஹூம் மீ. மு. மக்பூல்

அவர்களின் குடும்பத்தினர்க்கு

எமது

ஆழ்ந்த அனுதாபங்கள்

V

டிசைன் ரெக்ஸ்ரைல்ஸ்

23, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 22662

OUR

HEART-FELT CONDOLENCES

V

# S. S. Aboobucker & Bro.

Direct Importers, Dealers in Hardware & Paints

**121, K. K. S. Road,**

**JAFFNA.**

OUR DEEPEST SYMPATHIES

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

V

# S. M. K. MOHAMED & Sons

GENERAL MERCHANTS & TRANSPORT AGENTS

*Branch:*
60, Sea Beach Road,
COLOMBO - 11.
*T. P:-* **29148.**

*Head Office:*
49 A, Mavady Road,
Five Junction,
JAFFNA.

OUR

DEEPEST SYMPATHIES

&

HEARTFELT CONDOLENCES

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

# MACS

**LEADING TRANSPORTERS**

**&**

**COMMISSION AGENTS**

## COLOMBO. — JAFFNA.

68, Sri Kathiresan St,
COLOMBO 13
*T. P.* **34324**

153, Hospital Rd,
JAFFNA
*T. P.* **23757**

Sri Sanmuganatha Press. Jaffna.